Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 02 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 13 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 13 (29.09.2004) புதன்கிழமை இதழ்:363

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!

மகாராசி சில்க்ஸ்

சகல நிகழ்வுகளுக்கும் மகாராசியான ஸ்தாபனம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

T.P No - 0777286247

(c-2203)

# சமாதானம் குறித்த உண்மை நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவே ஐரோப்பாவுக்கு பயணம்!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

**அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் மிக விரைவாக ஆரம்பிக்கப்படவேண்டுமென்பதில் புலிகளின் தலைமை உறுதியாக இருக்கிறது. இந்த நிலையில் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்கு வரத் தயங்குகிறார்கள் என்று பொய்ப் பிரசாரங்களை அரசாங்கம் சர்வதேச ரீதியாக மேற்கொண்டு வருகிறது. எனவே உண்மையான நிலைப்பாட்டை சர்வதேச நாடுகளுக்குத் தெளிவுபடுத்துவதே எமது பயணத்தின் நோக்கம் என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

ஐரோப்பிய விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னர் செய்தியாளர்களுககு கருத்துத் தெரிவித்த அவர்,

இடைக்கால தன்னாட்சி வரைபு மிகக் காத்திரமான முறையில், முழுமையாக தயாரிக்கப்பட்டிருக்கின்றது. அது எமது சட்டமூலங்கள், சர்வதேச சட்டமூலங்கள் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இது தலைமைப்பீடத்தின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, எமது மக்களிடமும் முன்வைத்து அவர்களின் முழுமையான ஆணையைப் பெற்ற ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை என்ற வகையில் அதில் மாற்றம் செய்யவேண்டிய தேவையில்லை.

ஏனெனில், நாம் அதனை பேச்சுக்களுக்கான ஆலோசனை வரைபாகவே முன்வைத்திருக்கிறோம். இந்த வரைபு தொடர்பாக பேச்சுக்கள் மூலம் விவாதிக்கலாமே தவிர இப்போது மாற்றம் செய்யவேண்டிய தேவை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அண்மைய படுகொலைகளுக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை!

### யாழ்.அரசியற்துறை அறிவிப்பு

அண்மையில் யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களுக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லையென தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்று யாழ். மாவட்ட அரசியற்துறை வெளியிட்ட அறிக்கையில் -

அண்மையில் யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களுக்கு புலிகளே காரணம் என ஈ.பி.டி.பியினர் பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தியுள்ளனர். இந்தக் கொலைச் சம்பவங்களுக்கும் எமது இயக்கத்துக்கும் எந்தவித தொடர்பும் இல்லை.

இந்தக் கொலைக் குற்றங்களைப் புலிகள் மீது அபாண்டமாகச் சுமத்திக்கொண்டு ஈ.பி.டி.பி.யினர் தங்கள் கொலைவெறியாட்டத்தை நடத்தி வருகின்றனர். இக்கொலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

நமது ஈழநாடு இரண்டாம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ்

நான்கு வர்ணங்களில் | 60 இற்கும் மேற்பட்ட பக்கங்களுடன் | வெள்ளியன்று (01-10-2004)

வெளிவருகிறது! விலை ரூபா 10/= மட்டுமே

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

## புலிகளின்பிரநிதிகள் குழுவுடன் ஹொவ்டே-பிரட்ஸ்கர் சந்திப்பு!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ட்ரொன் புறூவ் ஹொவ்டே ஆகியோர் நேற்றிரவு சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போது தமிழ்



## புலிகளின் அரசியல் குழுவினர்

# புலிகளின் அரசியல் குழுவினர் ஐரோப்பாவுக்குப் புறப்பட்டனர்!



(கிளிநொச்சி)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் பிரமுகர்களைக் கொண்ட குழு, ஐரோப்பாவுக்கான விஜயத்தை மேற்கொள்வதற்காக - நேற்று கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டுச் சென்றது.

மூன்று வார காலம் ஐரோப்பிய நாடுகளில் தங்கியிருந்து அரசியல் நடவடிக்கைகள் மற்றும் பேச்சுக்களில் ஈடுபடுவதற்காகவே புலிகளின் அரசியல் குழுவினர் நேற்று புறப்பட்டனர்.

நேற்று பிற்பகல் 1.20 மணியளவில் கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்திலிருந்து - ஹெலிகொப்ரர் மூலமாக இக்குழுவினர் கெழும்புக்குப் (12 ஆம் பக்கம் பார்க்க)



குழுத்தலைவர் ட்ரொன் புறூவ் ஹொவ்டே ஆகியோர் நேற்றிரவு சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போது தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களின் கொலைகள் தொடர்பாக அந்தக் குழுக்கள் நடந்துகொள்ளும் விதத்தால் தாம் அச்சுறுத்தப்படுவதாகவும், அவமதிப்புக்குள்ளாக்கப்படுவதாகவும் விடுதலைப் புலிகளுக்குச் சர்வதேச ரீதியில் அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதமாக இந்தச் சம்பவங்கள் அமைந்துள்ளதாக நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிரட்ஸ்கர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த தமிழீழஅரசியற் துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் - இத்தகைய தமிழ்க் குழுக்களின் கொலைகள் விடுதலைப்புலிகளுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் முகமாக அதன் அடிப்படைநோக்கிலேயே மேற்கொள்ளப்படுகிறது.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இந்தக் கொலைகள் நடக்கின்றன இந்தக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பனிச்சங்கேணி காவலரண் மீது ஆர்.பி.ஜி. மூலம் தாக்குதல்!

## மட்டு-அம்பாறை அரசியற்துறை அறிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - பனிச்சங்கேணி பிரதேசத்திலுள்ள தமது முன்னணிக் காவலரண் மீது இனந் தெரியாத ஆயுதக்குழுவினரால் நேற்றுக்காலை 11.45 மணியளவில் ஆர்.பி.ஜி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறை தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அரசியற்துறை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கிரிமிச்சையில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் இருந்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலின்போது - புலிகளின் காவலரண்களுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை, அதற்கு மேலாகச் சென்ற ஆர்.பி.ஜி

(12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

# சின்னஞ்சிறு செய்திகள்

## விதை நெல்லுக்கு விண்ணப்பிக்கலாம்

(கைதடி)

காலபோக நெற்செய்கையினை மேற்கொள்வோர், தமது சம்மேளனங்களின் ஊடாகத் தேவையான விதை நெல்லுக்கு விண்ணப்பிப்பதன மூலம் கமநல நிலையங்களின் ஊடாகப்பெற்றுக்கொள்ள முடியுமென கைதடி கமநல நிலையம் அறிவித்துள்ளது. (29)

## பொது அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட ஆசிரியர்களுக்கான பொது அறிவுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி, திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், கைதடி விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் ஆகிய நிலையங்களில் நடைபெறவுள்ளது. இதில், முதல் மூன்று இடங்களைப்பெறும் ஆசிரியர்களுக்கு உலக ஆசிரியர் தினத்தன்று பரிசில்கள் வழங்கப்படும். (29)

## பரிசில் நாள்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் பரிசில் நாளும், கற்பகம் மலர் வெளியீடும் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு பொன்னுத்துரை அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் - பேராசிரியர் சபா.ஜெயராசா, நிகொட் நிறுவனப் பிரதித் திட்டப் பணிப்பாளர் கருவரத்தினராசா, உதவிக்கல்விப்பணிப்பாளர் தி .சிவஞானசுந்தரம், வலி.கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## பஸ் தடம்புரண்டது

(பருத்தித்துறை)

வல்லையில் தனியார் மினிபஸ் ஒன்று பாதையிலிருந்து விலகித் தடம்புரண்டது. இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. இதன்போது பலத்த சேதங்கள் எதுவும் இடம்பெறாதபோதும், பயணிகள் சிலர் சிறு காயங்களுககுள்ளாகினர்.(14)

## பருத்தித்துறையில் முதியோர் தினவிழா

பருத்தித்துறை பிரதேச செயலகம், எதிர்வரும் 2 ஆம் திகதி முதியோர், சிறுவர் தின நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

நிகழ்வுகள் - முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் - யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும், சிறப்பு விருந்தினர்களாக - பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். புஸ்பலிங்கம், வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.தயா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (14)

## வல்லிபுர ஆழ்வார் தீர்த்தோற்சவம்

வரலாற்றுச் சிறப்புமிக்க புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் நேற்று மாலை மச்ச அவதாரமாகத் தோன்றி வங்கக் கடலில் சமுத்திரத் தீர்த்தமாடினார்.

மூலமூர்த்தியாக சக்கர ஆழ்வார் உட்பட எழுந்தருளிகளை சுமந்தவாறு பக்தர்கள் ஆலயத்திலிருந்து மூன்றரை மைல் தொலைவிலுள்ள சமுத்திரக் கரைக்குச் சென்று சமுத்திர தீர்த்தமாடினர்.

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வந்த பக்தர்கள் கடலலை போன்று கூடிய பெருந்தொகையான பக்தர்களைக் காணக்கூடியதாகவிருந்தது.

தேர்த்திருவிழாவின்போது மழை காரணமாக பக்தர் தொகை குறைவாக இருந்தபோதும், நேற்று மழையில்லாததால் பெருமளவு பக்தர்கள் தீர்த்தோற்சவத்தில் கலந்து கொண்டனர். (14)

## அறிவுறுத்தல் கூட்டம்

மூன்றாம் தவணைப் பரீட்சை வினாத்தாள் தயாரித்தல் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு வலயக் கல்விப் பணிமனை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (29)

# தென்மராட்சி பாடசாலைகளில் ...மைப் பரிசில் பரீட்சையில் ...பெற்ற மாணவர் விபரம்

(சாவகச்சேரி)

அண்மையில் வெளியான ஐந்தாம் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் - தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் சித்திபெற்றவர்களின் தொகை விபரம் வருமாறு :

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை - 31, கொடிகாமம் திருநாவுக்கரசு - 08, வீரசிங்கம் மகா வித்தியாலயம் - 07, சாவகச்சேரி மகளிர் கல்லூரி - 07, கைதடி முத்துக்குமாரசுவாமி - 05, அமிர்தாம்பிகை நுணாவில் - 05, உசன் இராமநாதபுரம் - 05, வரணி மகா வித்தியாலயம் - 03 -

மட்டுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை - 03, வரணி நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம் - 02, குடமியன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை - 02, மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம் - 02, கச்சாய் அ.தமிழ்க்கலவன் பாடசாலை - 02, கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை - 02, மட்டுவில் கமலாசினி - 02,

அல்லாரை அ.தமிழ் கலவன் பாடசாலை - 02, கைதடி எரிகடல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, இடைக்குறிச்சி சிறிசுப்பிரமணிய வித்தியாலயம், மட்டுவில் மகா வித்தியாலயம், கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, சரசாலை ஸ்ரீ கணேஷா வித்தியாலயம், சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தலா ஒரு மாணவர் என்ற ரீதியில் சித்தியடைந்துள்ளனர். (29)

# அவசர கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறியினைப் பூர்த்தி செய்து வெளியேறிய 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் அணி மாணவர்களின் வேலைவாய்ப்பு நியமனங்கள் தொடர்பான அவசர கலந்துரையாடல் யாழ்.பல்கலைக்கழக கடலவள அபிவிருத்தி நிலையத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெறவுள்ளது.

எனவே, கல்வித்தகைமைச் சான்றிதழ், டிப்ளோமா பட்டச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்படப் பிரதிகளுடன் மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் சமுகம்தருமாறு கேட்கப்படுகின்றனர்.

## நீர் விநியோகம் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச்சபையால் மேற்கொள்ளப்பட்டுவரும் கரவெட்டி அத்துளுகுள குடிநீர் விநியோகம் சில நாட்களாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் நிலத்தடி நீர் மிக அரிது, அத்துடன் இதனை நம்பியுள்ள பாவனையாளர்களுக்கு முன்னறிவிப்பு ஏதுமின்றி நீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் குடிநீர் குழாய்கள் ஒவ்வொன்றுக்கும் அப்பகுதி மக்கள் மாதாந்தம் கட்டணம் செலுத்தி வருகின்றனர். இதனால், பாவனையாளர்கள் பெரிதும் சிரமமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(14)

## ஆலோசனைக் கூட்டம்

2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள தென்மராட்சி கல்வி வலய தையற் போட்டிக்கான ஆலோசனைக் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலையில் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (29)


## சிறு விளம்பரம்

**காணி விற்பனைக்கு**

**கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் காலாசாலைக்கு அருகிலுள்ள 1½ பரப்புக் காணி விற்பனைக்க உள்ளது. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி : இல.69, ஜீ.பி.எஸ் வீதி, கல்வியங்காடு யாழ்ப்பாணம்.** (946)



ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த



காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, (பு.நே)

அரசாட்சி

(சி-2725)

நாகம்ஸ் சுன்னாகம்

விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த

மதுர



தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

திறைச்சனல்ஸ் சங்கானை

தனுஸ், சிந்துலானி கருணாஸ் மற்றும் மணிவண்ணன் நடிப்பில்



வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

Return to two moon junction

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 6.00 (பு.நே)


# விற்பனை முகவர்களுக்கான கேள்விகோரல்

## யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களுக்கான உப்பு விநியோகம்

மேல் குறிப்பிட்ட சேவைக்கான, அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள், பதிவு செய்யப்பட்ட விற்பனை முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் ஆனையிறவு உப்பு உற்பத்திப் பேட்டைச் செயலகத்தில் மீளளிக்கப்படமுடியாத கட்டணம் ரூபா 5 000/- (ஐயாயிரம்) செலுத்திப் பெறப்பட்ட கேள்விப் படிவத்தினை 05.10.2004 ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் 08.10.2004 ஆம் திகதி பிற்பகல் 03.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகளை 'பணிப்பாளர், உப்பு உற்பத்திப்பேட்டை, பொருண்மிய மதியுரையகம், ஏ 9 சாலை, ஆனையிறவு' என முகவரியிட்டு, பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கலாம்.

கேள்வி சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களுக்கான உப்பு விநியோகம்' என்று குறிப்பிடவேண்டும்.

மேலதிக விபரங்களை 'ஆனையிறவு உப்பு உற்பத்திப் பேட்டை' செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர்,
உப்பு உற்பத்திப் பேட்டை,
ஏ 9 சாலை, ஆனையிறவு.

THE ORGANIZATION FOR PRODUCTION OF SALT

(சி-2865)

# சர்வதேசத்துக்கு சமாதான தேவதையாக தன்னைக் காட்ட முயல்கிறார் சந்திரிகா!

## அரியநேந்திரன் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனைத்துக் கட்சிகளையும் இணைத்து தேசிய ஆலோசனை பேரவை அமைக்க முயல்வது - சர்வதேசத்துக்குத் தன்னை சமாதான தேவதையாகக் காட்டும் ஒரு முயற்சியே அன்றி, உண்மையான சமாதான நோக்கத் துக்காக அல்ல என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்தார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

பேச்சுவார்த்தை மூலம் உண்மையான சமாதானம் இந்த நாட்டில் மிளிர வேண்டுமாக இருந்தால், விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை நகல் அடிப்படையில் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இதனைத் தட்டிக்கழித்து இங்கு ஒரு கதையும், அமெரிக்காவில் வேறு ஒரு கதையும், இந்தியாவில் மற்றொரு கதையுமாக மாறுபட்ட கதைகளைத் தொடர்ந்தும் ஜனாதிபதி சந்திரிகா கதைத்து வருகிறார்.

தற்போது உதவி வழங்கும் நாடுகள் உடனடியாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இதனால் சர்வதேச நாடுகளுக்குத் தம்மை சமாதான தேவதையாய் காட்டுவதற்காகவே தேசிய ஆலோசனை சபை என்ற புதிய குண்டை தூக்கிப் போட்டுள்ளார்.

தமிழ் மக்களாகிய நாம் இவ்வாறான பம்மாத்துக் குண்டுகளைக் கண்டு இன்னும் ஏமாந்து விடமாட்டோம். சிங்கள தேசம் ஒருக்காலும் தமிழர்களுக்கான உரிமையை வழங்கமாட்டாது என்பதை சர்வதேசம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அரசில் அங்கம் வகிக்கும் கூட்டு முன்னணிக் கட்சியிலுள்ள ஜே.வி.பி. கட்சியானது விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி நகல் திட்டத்தை எரிக்க வேண்டும் எனக் கூக்குரலிடுகின்றது.

அதே அரசுக்கு முட்டுக்கொடுத்திருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இடைக்கால தன்னாட்சி அடிப்படையில் பேச்சுவார்த்தைகளைத் தொடரவே தாம் ஆதரவு கொடுத்ததாகக் கூறுகின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா முன்னுக்குப் பின் முரணான கதைகளைக் கதைத்து காலத்தை வீணடித்து திண்டாடுகின்றார்.

இவை அனைத்தையும் கூர்ந்து அவதானிக்கும்போது, காலம் காலமாக தமிழ் மக்களை ஏமாற்றியது போல் தற்போது சர்வதேசத்தையும் சிங்கள தேசம் ஏமாற்ற கங்கணம் கட்டியிருப்பது தெளிவாகிறது என அந்த அறிக்கையில் குறிப்பிப்பிடப் பட்டுள்ளது.

## ஊர்காவற்படையினர் விவகாரம்

# சமரசம் செய்வதற்கு அரசாங்கம் இணக்கம்

(திருகோணமலை)

திருகோணமலை - கோமரங்கடவலயில் வைத்து விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்ட ஊர்காவற் படையினரை விடுவிக்க சமரச அணுகுமுறை ஏற்படுத்த தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புக்குழு ஊடாக புலிகளுடன் தொடர்புகொள்ளப்பட்டிருப்பதாகவும், விடுதலைப் புலிகளிடமிருந்து சாதகமானதொரு பதிலுக்கு அரசாங்கம் காத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இது குறித்து பேச, கண்காணிப்புக் குழுத் தலைவர் விரைவில் வன்னி செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத் இந்தப் பிரச்சினை விரைவில் சமரசமாகத் தீர்க்கப்படும் எனத் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத் தக்கது.

# சட்டவிரோத மின்பாவனையால் வருடமொன்றுக்கு 5 கோடி நட்டம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு உட்பட ஏனைய பகுதிகளில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளதால், இலங்கை மின்சார சபைக்கு வருடம் ஒன்றுக்கு 5 கோடி ரூபா நட்டம் ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் வருடம் ஒன்றுக்கு சட்டவிரோத மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வோரில் 15 பேர் வரை உயிரிழப்பது இதற்கு சான்றாகவுள்ளது.

முட்கம்பிகளைப் பயன்படுத்தி பாதுகாப்பற்ற முறையில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவதால் வீண் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன.

இதேவேளை, இதனைக் கருத்திற்கொண்டு, எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை மின்சார சபை எச்சரித்துள்ளது.

# அரசைப் பதவி கவிழ்க்கப் போவதாக தேசப்பற்றாளர் அமைப்பு எச்சரிக்கை!

(கொழும்பு)

அரசாங்கம் இடைக்கால நிர்வாகம் தொடர்பில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமானால் அரசைப் பதவி கவிழ்க்கப் போவதாக தேசப்பற்றாளர் அமைப்பு எச்சரித்துள்ளது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற இந்த அமைப்பின் தேசிய மாநாட்டில் உரையாற்றிய அமைப்பின் தலைவர் எல்லே குணவன்ச, இறுதித் தீர்வு ஒன்றின் அடிப்படையில் பேச்சுவார்த்தை ஒன்றை முன்னெடுப்பதற்கு தமது அமைப்பு ஆதரவை வழங்கும் எனத் தெரிவித்தார்.

எனினும், அதற்குள் இடைக்கால தீர்வு ஒன்று தொடர்பாக பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதற்கு தாம் எதிர்ப்பை வெளிக்காட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச - ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இடைக்கால நிர்வாகம் தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் கருத்தாகும்.

எனவே இங்கு அவருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான தொடர்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

நாட்டைத் துண்டாடி தமிழீழம் அமைக்கப்படுவதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான குழுவினர் தொடர்ந்தும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் தற்போதைய அரசாங்கம் நாட்டைத் துண்டாடுவதற்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டபோதும், அதுவும் இடைக்கால நிர்வாகம் குறித்த பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு முனைப்பை மேற்கொண்டுவருகிறது.

இது நாட்டைப் பெரும் அழிவுக்கு இட்டுச் செல்லும் ஆதலால் தமது கட்சி அதனைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாகவும் விமல் வீரவன்ச எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# பெருமளவு போதைப்பொருள் இந்தியாவிலிருந்தே வருகிறது

(கொழும்பு)

இலங்கைக்குக் கொண்டுவரப்படும் போதைப் பொருட்களில் 97 வீதமானவை இந்தியாவில் இருந்தே கடத்தி வரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1997 ஆம் ஆண்டளவில் 28 வீதமாக இருந்த ஹெரோயின் போதைவஸ்து கடத்தல் 1999 இல் 76 வீதமாகவும் 2002 ஆம் ஆண்டு 97 வீதமாகவும் உயர்ந்துள்ளதாக, போதைவஸ்து தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்தார்.

1990 களில் வடமேல் மாகாண, மேல் மாகாண கடலோரப் பகுதிகளே இந்தியாவில் இருந்து போதைப் பொருட்களைக் கடத்துவதற்கான மையங்களாக இருந்ததாகத் தெரிவித்த அவர் - யுத்தநிறுத்தத்தின் பின் மன்னார் கடலோரப்பகுதிகளே போதைவஸ்து மையங்களாக மாறியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



சேது சமுத்திர திட்டம் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறை மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் உரையாற்றுவதையும், கருத்துரை வழங்கிய கலாநிதி சூசை ஆனந்தன், தலைமை தாங்கிய கே.ரி.கணேசலிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

# புலிகளின் தலையீட்டை அடுத்து உழவு இயந்திரங்கள் ஒப்படைப்பு

(கொழும்பு)

அக்கரைப்பற்று வட்டமடு பிரதேசத்தில் கால்நடை வளர்ப்போர்களால் தடுத்து வைக்கப்பட்டிருந்த முஸ்லிம் விவசாயிகளின் உழவு இயந்திரங்கள் இரண்டு விடுதலைப் புலிகளின் தலையீட்டையடுத்து உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

வட்டமடு பிரதேசத்தில் விவசாயம் செய்யச் சென்ற எம்.எல். தம்பிலெப்பை மற்றும் எஸ்எல். செய்னுலாப்டீன் ஆகியோரின் உழவு இயந்திரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை அப்பகுதியிலுள்ள கால்நடை வளர்ப்போர்களால் தடுத்து வைக்கப்பட்டது.

குறிப்பிட்ட விவசாயிகள் விவசாயம் செய்யும் காணி கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரை என கால நடை வளர்ப்போர் தெரிவித்தனர். இந்தவிடயம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் குயிலின்பனுக்கும், அம்பாறை மாவட்ட பள்ளிவாசல் சம்மேளன பிரதிநிதிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் தலையீட்டையடுத்து குறிப்பிட்ட இரண்டு உழவு இயந்திரங்களும் நேற்று முன்தினம் திருக்கோவில் பொலிஸார ஊடாக உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை, மட்டக்களப்பு புனானை குளத்தில் மீன் பிடிக்கச் சென்ற 3 முஸ்லிம் மீனவர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவமொன்று குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக ஆணைக்குழு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# முஸ்லிம்களும், தமிழர்களுமே பௌத்த மதத்தை சீரழிக்கின்றர்!

## அஸ்கிரிய பீடாதிபதி கூறுகிறார்

(கொழும்பு)

இந்த நாட்டிற்குள் போதைப் பொருட்களைக் கொண்டு வருபவர்கள் முஸ்லிம்களும் தமிழர்களுமே ஆவர்.

இதனால் 80 வீதமான பௌத்த இளைஞர்கள் போதைப்பொருள் பாவனைக்கு ஆளாகியுள்ளனர் என அஸ்கிரிய பீடாதிபதி உடுகம சிறீ புத்தர கித்த தேரர் தெரிவித்தார்.

சிங்கள பௌத்த பிரஜைகள் குழு கண்டி அஸ்கிரிய பலிபான சந்தானந்த ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய வருடாந்த மாநாட்டில் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர் -

இது குறித்து எடுத்துக் கூறினாலும் எவரும் காதில் வாங்கிக் கொள்வது இல்லை. அதிகமான பௌத்த நாடுகளுக்கு நேர்ந்த கதி இலங்கைக்கும் எதிர்வரும் 20 அல்லது 30 வருடங்களில் ஏற்படலாம்.

முஸ்லிம்கள் இவ்வாறே பௌத்த நாடுகளை ஆக்கிரமித்தனர். இந்த வழியிலேயே வியாபாரம் என்ற வகையில் போதைப்பொருட்களை இந்த நாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

இந்தக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட ஹெல உறுமய தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மேதானந்த தேரர் இலங்கை சிங்கள பௌத்தர்களின் தேசமாகும்.

இந்த நாட்டில் எந்த இனத்தவர்களும் வாழலாம். அதற்கான சுதந்திரம் உண்டு.

தனிநாடு எனக் கூறிக்கொண்டு, நாட்டின் நிர்வாகத்தைக் கைப்பற்றவோ அல்லது நாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றவோ எவருக்கும் உரிமை கிடையாது.

இந்த நிலையில் பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் முதலில் நாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றிக் கொண்டு, பின்னர் நாட்டின் நிர்வாகத்தை தம்வசப் படுத்துவதே நோக்கமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கருணா குழுவுடன் தொடர்புடைய சிங்களவர் ஒருவர் சுடப்பட்டார்!

(கொழும்பு)

பொலன்னறுவை மாவட்டம் செவனப்பிட்டியில் கருணா குழுவுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் சிங்களவரொருவர் நேற்றுமுன்தினம் இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டார்.

செவனப்பிட்டிய வாசியான டிக்சன் த மெல் (வயது 46) என்ற இந்த நபர் வாயில் துப்பாக்கியால் சுடப்பட்ட நிலையில், பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

வாகனச் சாரதியான இவர், வீட்டிலிருந்து வாகனத்தில் செவனப்பிட்டி நகரை சென்றடைந்த சமயம் வாகனத்திற்கு அருகில் வந்த இனந்தெரியாத இளைஞரொருவர் இவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச்சென்றார்.

வெலிக்கந்தை பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப விசாரணைகளின்போது குறிப்பிட்ட நபர், கருணா குழுவுடன் வைத்திருந்த தொடர்பு காரணமாகவே சுடப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

### பேர்லின் மரதன் போட்டியில்

# முதல் மூன்று இடங்களையும் கென்யா பெற்றுக்கொண்டது!

(ஜேர்மனி)

ஜேர்மனியில் நடைபெற்ற பேர்லின் மரதன் போட்டியின், ஆண்களுக்கான பிரிவில் கென்யா முதல் மூன்று இடங்களைக் கைப்பற்றியது. இதில் பலிக்ஸ் லிமோ முதலாவது சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

இந்தப் போட்டி ஜேர்மனியின் தலைநகரமான பேர்லினில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தப் போட்டியின்போது வானிலை மிக மோசமாக இருந்தது.

இந்த மரதன் போட்டியின் தூரம் 42.195 கிலோமீற்றர் ஆகும். இதனைக் கென்ய வீரர் லிமோ 2 மணி 6 நிமிடம் 44 விநாடிகளில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். இதன்மூலம் இந்தப் போட்டியில் கென்யாவிற்குத் தொடர்ந்து 6 ஆவது வெற்றியைப் பெற்றுத் தந்தார்.

மற்றொரு கென்ய வீரரான ஜோசப்ரிரி 2 மணி 6 நிமிடம் 49 விநாடிகளில் இந்தத் தூரத்தைக் கடந்து 2 ஆவது இடத்தைப் பிடித்தார். 2 மணி 07 நிமிடம் 05 விநாடிகளில் வந்த ஜோசுவா செலங்கா (கென்யா) மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

கடந்த வருடம் பேர்லின் மரதனில் கென்ய வீரர் பால்டெர்காட் 2 மணி 04 நிமிடம் 55 விநாடிகளில் அந்தத் தூரத்தைக் கடந்து புதிய உலக சாதனையை ஏற்படுத்தியது நினைவுகூரத்தக்கது.

இந்த முறை முதலாவதாக வந்த பெலிக்ஸ் லிமோவிற்கு பால் டெர்காட்டின் சாதனையை முறியடிக்க வாய்ப்புக் கிடைத்தது. ஆனால், மோசமான வானிலையால் லிமோவால் தனது முழுத்திறமையையும் வெளிப்படுத்த முடியவில்லை. தவிர மேற்படி காரணத்தால், லிமோவால் வேகமான சாதனையையும் சமன்செய்ய இயலாமல் போயிற்று. இந்த வருடம் ஏப்ரல் மாதம் ராட்டர் டாமில் நடந்த போட்டியில் லிமோ 2 மணி 06 நிமிடம் 14 விநாடிகளில் கடந்து சாதனை படைத்தார்.

பெண்களுக்கான மரதன் போட்டியில் -

ஜப்பான் வீராங்கனை யோகோஷிபுய் 2 மணி 19 நிமிடம் 41 விநாடிகளில் வந்து முதலிடத்தைப் பிடித்தார். இதன்மூலம் ஜப்பானுக்கு இந்தப் போட்டியில் தொடர்ந்து 6 ஆவது வெற்றிவாய்ப்பைபப் பெற்றுத் தந்தார். மற்றொரு ஜப்பான் வீராங்கனையான ஹிரோமி ஓமினாமி 2 மணி 23 நிமிடம் 41 விநாடிகளில் இந்தத் தூரத்தைக் கடந்து இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

ஜேர்மனியைச் சேர்ந்த உள்ளூர் வீராங்கனையான சொன்யா ஒபரெம் 3 ஆவது இடத்தைப் பிடித்து ஜேர்மனிக்கு ஆறுதல் வெற்றியைப் பெற்றுத்தந்தார். இந்தத் தூரத்தைச் சொன்யா கடக்க எடுத்துக்கொண்ட நேரம் 2 மணி 24 நிமிடம் 53 விநாடிகளாகும்.

பெண்களுக்கான பிரிவில் - பேர்லின் மரதனில் சாதனை நேரம் 2 மணி 19 நிமிடம் 46 விநாடிகளாகும்.

2001 ஆம் ஆண்டில் ஜப்பான் வீராங்கனை நோகோட காஷி இந்தச் சாதனையைப் படைத்தார். இந்த வருடத்தில் சிபுவின் சாதனை ஒரு வேகமான சாதனையாகும். இதற்கு முன்பு கென்ய வீராங்கனை மார்க்கரெட் ஒசாயோ ஏப்ரல் மாதம் லண்டனில் நடந்த போட்டியில் 2 மணி 22 நிமிடம் 35 விநாடிகளில் சாதனை படைத்ததும் குறிப்பிடத்தக்கது.

## இந்திய கிரிக்கெட்சபைத் தேர்தலில் சரத்பவாருக்கு வெற்றி வாய்ப்பு!



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராகவுள்ள டால்மியாவின் பதவிக்காலம் முடிவடைகிறது.

இதனைத் தொடர்ந்து புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் கொல்கத்தாவில் இன்று நடைபெறுகிறது.

மும்பைக் கிரிக்கெட் சங்கத் தலைவரும் மத்திய அமைச்சருமான சரத் பவார், ஹரியானாவைச் சேர்ந்த ரன்பீர்சிங் ஆகியோர் தலைவர் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்.

31 உறுப்பினர்கள் வாக்களித்துத் தலைவரைத் தேர்வு செய்வார்கள். இதில் சரத்பவார் வெற்றிபெற வாய்ப்பிருப்பதாகக் கருதப்படுகிறது.

### அஸ்ரா கிண்ணக் கிரிக்கெட்

## யாழ். மத்திய கல்லூரி அணி அரையிறுதி ஆட்டத்துக்குத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அஸ்ரா கிண்ணக் காலிறுதி ஆட்டத்தில் கந்தளாய் மகா வித்தியாலய அணியை 9 ஓட்டங்களால் யாழ்ப்பாண மத்திய கல்லூரி அணி வென்றது.

இலங்கைப் பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் அஸ்ரா கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் வென்று, காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்ற யாழ்ப்பாண மத்திய கல்லூரி அணியினருடன், கந்தளாய் மத்திய கல்லூரி அணி நேற்று யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் மோதியது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கந்தளாய் மத்திய கல்லூரி அணி, முதலில் யாழ். மத்திய கல்லூரி அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது. மழை காரணமாகச் சற்று மந்த கதியில் இடம்பெற்ற இந்தப் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணியினர் - 68 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தனர்.

இதனையடுத்து இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடிய கந்தளாய் மத்திய கல்லூரி அணியால், ஆட்டம் முடியும் வரை 59 ஓட்டங்களையே பெறமுடிந்தது. இதன்மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி 9 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தில் வெற்றியீட்டிய தன்மூலம் அஸ்ரா கிண்ணத் துடுப்பாட்டப் போட்டிகளில் அரையிறுதிப் போட்டிக்கு யாழ். மத்திய கல்லூரி அணியினர் தகுதிபெற்றுத் தெரிவாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மூன்று நாடுகள் கிரிக்கெட்

## பாகிஸ்தான் அணியில் இரு புதுமுக வீரர்கள்!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் - இலங்கை - சிம்பாப்வே ஆகிய மூன்று நாடுகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி நாளை பாகிஸ்தானில் ஆரம்பமாகிறது.

இந்தப் போட்டிக்கான பாகிஸ்தான் அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. புதுமுக வீரர்களாக பாசித்கான், இப்திகார் ஆகியோர் அணிக்குத் தேர்வு பெற்றுள்ளனர். இதில் பாசித்கான் முன்னாள் கப்டன் மஜீத் கானின் மகன் ஆவார். ஐ.சி.சி போட்டியில் விளையாடிய அசார் ம.்.மூட், இம்ரான் பர்கத் ஆகியோர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் அணி விபரம் வருமாறு -

இன்ஸமாம் (அணித் தலைவர்), யுகானா, யுனூஸ்கான், யசீர் ஹமீத், அப்ரிடி, மிசாபா உல்ஹக், சொயிப் மலிக், அப்துர் ரசாக், மொயின்கான், சல்மான்பட், பாசித்கான், இப்திகார், ரானா நவீத் சொகைப் அக்தர், முகமது சமி.




## பின்தங்கிய மாவட்டங்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி

ஸ்ரீலங்கா கிரிக்கெட் பின்தங்கிய மாவட்டங்களுக்கு இடையே சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தி வருகின்றது.

இதன் இரண்டாம் கட்டத்திற்கு திருகோணமலை, இரத்தினபுரி, நுவரெலியா, அநுராதபுரம், ஹம்பாந்தோட்டை, அம்பாறை ஆகிய மாவட்ட கிரிக்கட் சங்க அணிகள் தெரிவாகியுள்ளன.

இரண்டு குழுக்களாக இவை பிரிக்கப்பட்டு, லீக் முறையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதன் போட்டி ஒன்று - கடந்த வெள்ளிக்கிழமை தம்புள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடத்தப்பட்டது. இதில், திருகோணமலை மாவட்ட அணியை எதிர்த்து நுவரெலியா மாவட்ட அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நுவரெலியா மாவட்ட அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் 44 ஓவர்களில் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருகோணமலை மாவட்ட அணி - 19.1 ஓவர்களுக்கு 3 விக்கெட் இழப்புக்கு 136 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கட்டுக்களால் வெற்றிபெற்றது. இதில், பிறேமஸ் ஆட்டம் இழக்காமல் 65 ஓட்டங்களைப் பெற்றார்.

இதையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை - திருகோணமலை மாவட்ட அணிக்கும் இரத்தினபுரி மாவட்ட அணிக்கும் இடையே தம்புள்ள சர்வதேச மைதானத்தில் நடைபெறவிருந்த போட்டி, மழை காரணமாக நடைபெறவில்லை. இதன் காரணத்தால் இரு மாவட்ட அணிகளுக்கும் சமனான புள்ளிகள் வழங்கப்பட்டது. இந்தப் போட்டியின் இறுதிப்போட்டியில் விளையாடும் தகைமையை திருகோணமலை மாவட்ட அணி பெற்றுள்ளது. (04)

### பாகிஸ்தான் முத்தரப்புத் தொடர்

## இலங்கை அணியிலிருந்து லசித் மலிங்க நீக்கம்!



(கொழும்பு)

பாகிஸ்தானில் நாளை ஆரம்பமாகவுள்ள, பாகிஸ்தான் - சிம்பாப்வே - இலங்கை அணிகளுக்கிடையிலான முத்தரப்புப் போட்டித் தொடரிலிருந்து இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளரான லசித் மாலிங்க நீக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, 15 பேர் கொண்ட இடதுகைத் துடுப்பாட்ட வீரரான கண்டம்பே மற்றும் இடதுகை சுழற்பந்து வீச்சாளர் ரங்கண ஹேரத் ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

லசித் மாலிங்க - நான்கு ஒருநாள் போட்டித் தொடர்களில் மட்டுமே விளையாடியுள்ளார்.

இலங்கை அணியில் விளையாடிய வீரர்களில் மிகக் குறைந்த போட்டிகளில் விளையாடிய ஒரேயொரு வீரர் லசித் மாலிங்க என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் ஆரம்பமாகும் முத்தரப்புப் போட்டியில் நாளைய முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் சிம்பாப்வே அணிகள் மோதுகின்றன.

இந்த முத்தரப்புப் போட்டிகளின் இறுதி ஆட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்த முத்தரப்புத் தொடர் முடிவடைந்த பின்னர் இலங்கை அணி பாகிஸ்தான் அணியுடன் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

முத்தரப்புப் போட்டிகளுக்கான இலங்கை அணி விபரம் :

மாவன் அத்தபத்து (அணித் தலைவர்), சனத் ஜயசூரிய, குமார் சங்கஹார, மஹேல ஜயவர்த்தன, திலகரட்ண, டில்ஷான், சமன் ஜயந்த, அவிஷ்க குணவர்த்தன, ம.்.ரூவ், சமிந்தவாஸ், உபுல் சந்தன, நுவான் சொய்சா, டில்கார பெர்னான்டோ, கண்டம்பே, ரங்கன ஹேரத், கௌசல்ய லொக்கு ஆராய்ச்சி.

## இந்திய பளுதூக்கும் சங்கத்துக்கு ஒரு வருடத் தடை

(புடாபெஸ்ட்)

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற இந்திய வீராங்கனை பிரதிமா குமாரி போதை மருந்து பாவித்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இரண்டாம் கட்டச் சோதனையிலும் இது உறுதிசெய்யப்பட்டது. இந்திய வீராங்கனைகள் அடிக்கடி போதை மருந்து பயன்படுத்திக் கொள்வதால், இந்திய பளுதூக்கும் சம்மேளனத்துக்கு ஒரு ஆண்டு தடை விதிக்கப்படலாம் என்று கருதப்பட்டது.

இந்த நிலையில் சர்வதேச பளுதூக்கும் சம்மேளனம் இது தொடர்பாக இந்திய பளு தூக்கும் சம்மேளனத்தை ஒரு வருடத்துக்குத் தற்காலிகமாகத் தடைசெய்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

### ஹொக்கி டெஸ்ட் தொடரில்

## பாகிஸ்தானை வீழ்த்திய இந்தியா போட்டியைச் சமன் செய்தது

(புதுடெல்கி)

பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெற்ற ஹொக்கித் தொடரில் இரண்டாவது போட்டியில், இந்தியா 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுத் தொடரைச் சமன்செய்தது.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே மொத்தம் 8 ஹொக்கித் தொடர்கள் நடத்த முடிவு செய்யப்பட்டன. இதில் 4 டெஸ்ட் பாகிஸ்தானிலும், 4 டெஸ்ட் இந்தியாவிலும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குவெட்டாவில் நேற்றுமுன்தினம் நடந்த இரண்டாவது போட்டியில் -

இந்தியா 4:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இதன்மூலம் தொடர் 1:1 என்ற நிலையில் சமனானது.

முன்னதாக கராச்சியில் நடந்த முதலாவது போட்டியில் இந்தியா 1:2 என்ற கணக்கில் பாகிஸ்தானிடம் தோல்வியடைந்தது.

இரண்டாவது போட்டியில் - இந்தியா சார்பில் சங்கீர்சிங் 2 கோல்களும் (13 ஆவது மற்றும் 17 ஆவது நிமிடம்), இக்னேஸ் திர்கி (33 ஆவது நிமிடம்) மற்றும் துஷார் கண்டேகர் (60 ஆவது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோல்களை அடித்தனர்.

பாகிஸ்தான் 4 பனால்டி கோணர்களை வீணடித்தது. 69 ஆவது நிமிடத்தில் சொகைல் அப்பாஸ் 5 ஆவது பனால்டி கோணரைக் கோலாக மாற்றினார்.

இந்தத் தொடரில் இந்தியா பெறும் முதலாவது வெற்றி இது வென்பது குறிப்பிடத்தக்கது.

### 5 ஒருநாள், 3 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்க

## பாகிஸ்தான் அணி பெப்ரவரியில் இந்தியா வருகை தரவுள்ளது!

(புதுடெல்கி)

இந்தியக் கிரிக்கெட் அணி பெப்ரவரி மார்ச் மாதங்களில் பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடியது. இதன் தொடர்ச்சியாக பாகிஸ்தான் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் இந்தியா வருகிறது. இதனை இந்தியக் கிரிக்கெட் சபைச் செயலாளர் எஸ்.கே. நாயர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறும்போது பெப்ரவரி மாதம் பாகிஸ்தான் அணி இந்தியாவுடன் விளையாட விருப்பம் தெரிவித்துக் கடிதம் அனுப்பியது. பெப்ரவரி 25 ஆம் திகதிக்குப் பிறகு இந்தத் தொடர் இருக்கவேண்டும் என்று நாங்கள் கூறினோம். இதனைப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஏற்றுக்கொண்டது என்றார். போட்டி நடைபெறும் இடங்கள், திகதி விபரம், போட்டி விபரம் என்பன இன்னும் முடிவுசெய்யப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணி இந்தியாவில் ஆறு வார காலம் சுற்றுப் பயணம் செய்யும். அந்த அணி இந்தியாவுடன் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டியில் விளையாடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய கிரிக்கெட் சபையின் இன்றைய கூட்டத்தில் இந்தத் தொடர் குறித்து விவாதிக்கப்படும்.

இந்திய கிரிக்கெட் சபையின் பவள விழாவையொட்டி பாகிஸ்தான் அணி நவம்பர் மாதம் இந்தியா வந்து ஒரேயொரு போட்டியில் விளையாடவுள்ளது. இந்தப் போட்டி நவம்பர் 14 அல்லது 15 ஆம் திகதியில் கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது.

## இருட்டறை

வினா
- சகினாவின் பெருமிதத்துக்கு காரணங்களாக இருந்தவை எவை?
- அவளது பெருமிதத்தை அர்த்தமற்றதாக்கிய ரஸாக்கின் கேள்வி யாது?
- ரஸாக்கின் கேள்வியால் சகினாவின் மனதில் தோன்றிய எண்ணங்களை விபரிக்க?

சந்தர்ப்பம் கூறல்
- "வாராம என்ன செய்யச் சொல்ரா? மாடு மாதிரி ஒழைச்சாலும் புண்ணியமில்லை"

1. இக்கூற்று இடம்பெறும் கதையின் தலைப்பு யாது?
2. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
3. யாருக்கு கூறப்பட்டது?
4. இக்கூற்றை எழுத்து வழக்கு நடையில் எழுதுக?

## தேவ கிருபையை முன்னிட்டு வாழும்

சந்தர்ப்பம் கூறல்
- "கிழவியட மகன் விலாசமென்ன? அந்தக் காயிதத்தைக் காணயில்ல. நான் சும்மா தந்தியடிச்சன் எண்டு சொல்லீறன்"

1. இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
2. யாருக்கு கூறப்பட்டது?
3. இங்கு குறிப்பிடப்படும் கிழவி பலராலும் எவ்வாறு அழைக்கப்பட்டாள்?
4. 'கிழவியட மகன்ர விலாசமென்ன' என்ற கேள்விக்கு கொடுக்கப்பட்ட விடை என்ன?

வினா
- "தேவகிருபையை முன்னிட்டு வாழும்" என்ற சிறுகதை மகனுக்காக ஏங்கித் தவிக்கும் ஒரு தாயின் மனநிலையைச் சித்திரிக்கின்றது. விளக்குக?

## முடியாத கதைகள் பல

வினா
- 'முடியாத கதைகள் பல' என்ற சிறுகதையை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக?
- 'பொன்னம்மா என்னும் கதாபாத்திரம் சித்தரிக்கப்பட்டிருக்கும் முறையை விளக்குக?
- இப்பாத்திரப் படைப்பு ஊடாக மலையக மக்கள் வாழ்க்கைப் பிரச்சினைகள் எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன?

## பழையதும் புதியதும்

வினா
- பழைமைக்கும் புதுமைக்குமிடையே காணப்படும் முரண்பாடுகளைச் சித்தரிப்பதே பழையதும் புதியதும் கதையாகும்' இக் கூற்றினைப் பொருத்தமான ஆதாரங்களுடன் விீத்துரைக்க?

## மலையகமும் தமிழ் இலக்கியமும்

வினா
- 1940 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மலையகத்தில் பின்வரும் துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியை "மலையகமும் தமிழ் இலக்கியமும்" என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு மதிப்பிடுக?

1. சிறுகதை இலக்கியம்
2. நாவல் இலக்கியம்

## கவிதை உள்ளம்

வினா
- "கவிதை உள்ளம் படைத்தோன் இயற்கையில் இன்பங் காணலாம்" இக்கருத்து கவிதை உள்ளம் பற்றிய ... கவிஞரால் எடுத்துரைக் கப்பட்டிருக்கும் முறையை விளக்குக?

**ப. மாறன்**

## கணிதம்

1. 2 கிலோ சீனியின் விலை 82 ரூபா எனின், 400 கிராம் சீனியின் விலை யாது?
2. $2X(X-3)=0$ மூலகங்களைக் காண்க?
3. $2Y=5X+6$ என்ற நேர்கோட்டு சமன்பாட்டின் படித்திறன் யாது? வெட்டுத்துண்டு யாது?
4. 
i) $A\cap B$ இன் மூலகங்களைக் காண்க?
ii) $n(A\cup B)$ யாது?
5. $2(X-1)+3(X+2)$ சுருக்குக?
6. ஒரு வானொலிப் பெட்டியை 540 ரூபாவுக்கு விற்ற 10% நட்டம் அடைந்தால் கொள்விலையாது?
7. ஒரு கூட்டல் விருத்தியின் முதல் 2 உறுப்பு 3 பொது வித்தியாசம் 2 இதன் முதல் 10 உறுப்புக்களின் கூட்டுத்தொகை யாது?
8. ஒரு ஒழுங்கான பல்கோணியின் ஒரு அகக்கோணம் 160° எனின் பக்கங்களின் எண்ணிக்கை எவ்வளவு?
9. 
S,R இன் இரு கூறாக்கிகள் O இல் சந்திக்கிறது $\hat{P}=100°$ எனின் $S\hat{O}R$ இன் அளவு யாது?
10. $\text{Log}_{10}{}^{3.7}=3705$ எனின் $\text{Log}^{10}{}^{0.00372}$ இன் பெறுமதி யாது?
11. $\frac{1}{X-3}=\frac{2}{X+2}$ தீர்க்க?
12. ஒரு செங்கோண முக்கோணியில் செம்பக்கம் அல்லாத பக்கங்கள் முறையே 10 Cm 8 Cm ஆயின் இதன் பரப்பளவு யாது?
13. 7456 ஐ கிட்டிய 100 க்கு மட்டம் தட்டுக?
14. சாய் சதுரத்தின் மூலவிட்டங்களின் இரு இயல்புகளைத் தருக.
15. ஒரு வட்டத்தின் பருதியின் அளவு 88 m எனின் பரப்பளவு யாது?
16. $\frac{a}{b}=\frac{2}{5}$ எனின் $\frac{(a+b)}{b}$ இன் பெறுமானம் யாது?
17. ஒரு தொகை விளாம்பழங்களில் 3/7 பழுதடைந்து விட்டன எஞ்சியதன் 1/4 பங்கு விற்கப்பட்டது. விற்கப்பட்ட பழங்கள் 30 எனின் மொத்த பழங்கள் எத்தனை?
18. $\sqrt{12}$ விகிதமுறுப் பகுதி எண்ணாகத் தருக?
19. $Y=(X-3)3+2$ என்ற வளையியின் திரும்பல் புள்ளியின் ஆள்கூறு யாது?
20. $5a+3b=1$, $3a+3b=5$ தீர்க்காமல் $(X+Y)$ இன் பெறுமதி யாது?
21. $-3\leq X\leq 2$ என்ற சமனிலியை எண்கோடு மூலம் குறிக்க?
22. $\sqrt{2}=1.414$ எனின் $\sqrt{72}$ இன் பெறுமதி யாது?
23. $\frac{X+Y}{X-Y}=6$ எனின் Y, X இல் கூறுக?
24. ஒரு குடும்பத்தில் 3 பிள்ளைகள் உள்ளனர் மூன்று பிள்ளைகளும் ஆண்களாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?
25. 
உருவில் X,Y இன் பெறுமானங்களை காண்க?
26. $X2+7X$ என்ற கோவையை நிறைவர்க்கமாக்க கூட்ட வேண்டிய உறுப்பு யாது?
27. 1101 இரண்டு + 1111இரண்டு =
28. ஒரு சதர முகியின் பரப்பு 1350 cm 2 எனின் அதன் ஒரு பக்க நீளம் யாது?

B. சிவா

இங்கே மடிக்கவும்





# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

- இல 1 முதல் 7 வரை வரைபுகள் காலத்துடன் மாறும் சில தரவுகளைக் காண்பிக்கின்றன. இந்த வரைபுகளை நன்கு அவதானித்து விடை எழுதுக.




1. காலத்துடன் சீராக அதிகரிக்கும் தரவையுடைய வரைபு எது? ..........
2. காலத்துடன் சீராக அதிகரித்து பின் குறைவடையும் தரவையுடைய வரைபு எது? ..........
3. வரைபில் காலத்துடன் சீராக குறைவடையும் தரவு எது? ..........
4. காலத்துடன் சீராக மாற்றமடையாத தரவையுடைய வரைபு எது? ..........

- மேற்படி வரைபுகளிலிருந்து பெற்ற முடிவுகளென ஒரு மாணவனால் எழுதப்பட்டுள்ள முடிவுகள் கீழே உண்டு. அவை சரியாயின் "R" எனவும் பிழையாயின் "W" எனவும் எதிரேயுள்ள கூட்டினுள் அடையாளம் இடுக.

5. வரைபு 1 இல் காலத்துடன் பிறப்புக்களின் எண்ணிக்கை குறைவடைகின்றது. ☐
6. மருத்துவ வசதி சீரற்றுள்ள தன்மையை வரைபு 4 காட்டுகின்றது. ☐
7. வரைபு 2 இலிருந்து இனிவரும் காலங்களில் இறப்புக்களின் எண்ணிக்கை மேலும் குறைவடையும் என்ற முடிவுக்கு வரலாம். ☐

- இல 8 முதல் 10 வரை சுருக்கமான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.

8. இலங்கையின் தேசிய விளையாட்டு எது? ..........

- பின்வரும் சொற்களை தமிழ்மொழியில் எழுதுக.

9. BIRDS .......... 10. AGE ..........

- இல. 11 முதல் 15 வரை முதலாவதாகத் தரப்பட்ட சோடிச் சொற்களுக்கிடையேயான ஒற்றுமையை அவதானித்து அடுத்துத் தரப்பட்ட சொல்லுடன் பொருத்தமான தொடர்புடைய சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

11. கிழமை: திங்கள், மாதம் ..........
(1) திங்கள் (2) தை (3) பன்னிரண்டு
12. மான்: புள்ளிமான், புலி ..........
(1) ஆண்புலி (2) சிறுத்தை (3) வரிப்புலி
13. கப்பல்: துறைமுகம், விமானம் ..........
(1) விமானத்தளம் (2) ஆகாயம் (3) வேகம்
14. கருமை: வெண்மை, இருள் ..........
(1) ஒலி (2) ஒளி (3) சுடர்
15. கத்தி: வெட்டுதல், எழுதுதல் ..........
(1) பேனா (2) கடதாசி (3) கதை

- சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

16. மாலா செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் சைவ உணவு உண்பாள். மாலா நாளை மறுநாள் சைவ உணவு உண்பாள். நேற்று சைவ உணவு உண்டாள் எனின், இன்று என்ன கிழமை? ..........

17. கரன் கடைக்குச் சென்று 3 கொப்பிகளும் 50 ரூபா பெறுமதியுள்ள புத்தகம் ஒன்றும் வாங்கிவிட்டு ரூபா 100 இனைக் கொடுக்கக் கடைக்காரன் ரூபா 5.00 இனை மீதிப்பணமாகக் கொடுத்தால், ஒரு கொப்பியின் விலை என்ன? ..........

18. ☐☐ பல இலக்கங்களை முகங்களில் கொண்ட சதுரமுகி ஒன்றின் இரு நிலைகள் அருகே உண்டு. இதில் 1 என்னும் எண்ணிற்கு எதிரான பக்கத்தில் உள்ள எண் யாது? ..........

19. கமலா, விமலா, தமலா ஓர் ஓட்டத்தை ஓடினர். விமலா கடைசிவரை ஓடிமுடிக்கவில்லை. தமலா முதலில் ஓடி முடிந்தாள். கடைசியாக ஓடி முடிந்தவள் யார்? ..........

20. மாலா, கலாவைவிட உயரமானவள். கலா, கமலாவைவிட உயரமானவள். மாலா, கமலா இருவரிலும் உயரமானவள் யார்? ..........

- பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடையெழுதுக.

பனைமரம், தென்னைமரம், வாழைமரம்  
மக்கள் பழகும் பழக்கத்திற்கு மூன்று மரம்  
பனை மரத்துக்கு ஒருதரம் தண்ணீர்  
பாய்ச்சிவிட்டால் போதும்  
அது தலைவளர்த்து தலையில் நுங்கினை  
தந்து விளையாடும்  
தென்னை மரத்துக்கு தினசரி கொஞ்சம்  
தீர்த்தம் இடவேணும்.

21. இப்பாடலில் வரும் மரங்கள் எவை? ..........
22. கற்பகதரு எது? ..........
23. தண்ணீர் என்பதைப் பிரித்து எழுதுக? ..........
24. பனையின் இளங்காய் எவ்வாறு அழைக்கப்படும்? ..........
25. ஒத்தசொல் தருக.
(1) நீர் .......... (2) தலை ..........

26. கீழே தரப்பட்ட வாக்கியங்களைச் சரியான ஒழுங்கில் அமைக்கும் பொழுது பந்தி ஒன்றை நிர்மாணிக்க முடியும். அச்சரியான ஒழுங்மைப்புடைய விடையின் கீழ் கோடிடுக.

(1) அவன் இளமையிலே வில்வித்தையிலே வல்லவனாய் விளங்கினான்.
(2) அத்தினாபுரம் என்னும் நகருக்கு அண்மையில் அடர்ந்த காடு ஒன்று இருந்தது.
(3) அவனுடைய ஆற்றலை வேடுவர்கள் கண்டனர்.
(4) அக்காட்டிலே ஏகலைவன் என்னும் வேட்டுவச் சிறுவன் வாழ்ந்து வந்தான்.
(5) "இவன் எதிர்காலத்தில் பெரிய வீரனாக வருவான்" என எண்ணி மகிழ்ந்தனர்.

(1) (1,3,4,2,5) (2) (2,4,5,3,1) (3) (3,2,4,5,1) (4) (2,4,1,3,5)

- இல. 27 முதல் 31 வரை ஒவ்வொரு வரிசையிலும் 5 சொற்கள் உண்டு அவற்றுள் ஒத்தகருத்துள்ள, எதிர்கருத்துள்ள சொற்களைத் தவிர்த்து வித்தியாசமான சொல்லின் கீழ் கோடிடுக.

27. (1) புத்தகம் (2) எழுத்து (3) பேனா (4) மை (5) நூல்
28. (1) குற்றம் (2) நோய் (3) மருந்து (4) சுற்றம் (5) வியாதி
29. (1) தீ (2) வெப்பம் (3) நெருப்பு (4) ஒளி (5) சாம்பல்
30. (1) இறைவன் (2) அரசன் (3) அரசி (4) மன்னன் (5) ஈசன்
31. (1) தொந்தரவு(2) சச்சரவு(3) தொல்லை(4) சண்டை (5) ஏசுதல்

- இல 32 முதல் 37 வரை வினாக்களுக்குரிய விடைகளை இடைவெளியில் எழுதுக

32.

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 6 | 12 | 24 | 48 |
| 5 | 10 | ..... | 40 | 80 |

இல. 33 முதல் 38 வரையுள்ள வினாக்களுக்கு தந்துள்ள அறிவுறுத்தலைப் பயன்படுத்தி குறுக்கெழுத்துப் புதிரைப் பூரணப்படுத்துக.




இடமிருந்து வலம்

33. மனை என்பதற்கு ஒத்தகருத்துள்ள சொல்............................

34. கம்பி அதிர்வதனால் நாதம் எழும் ஒரு சங்கீத உபகரணம் ..... .................. ஆகும்.

35. விளக்குமாறு செய்வதற்கு தென்னை மரத்திலிருந்து பெறப்படுவது....

36. செந்நீர் என்பதற்கு ஒத்தசொல்.................................

மேலிருந்து கீழ்

33. திசையறிகருவி எந்நேரமும் காட்டும் திசை .........................

37. நான்கு முகங்களைக் கொண்ட திண்ம உரு ..............................

38. A,B,C,D, ஆகிய பாத்திரங்களிலிருந்து தேவைக்காக முறையே 175 ml ஒவ்வொரு பாத்திரங்களிலிருந்து எடுக்கப்பட்டது. தற்போது பாத்திரம் ஒவ்வொன்றிலும் உள்ள கனவளவு எவ்வளவு எனக் குறிப்பிடுக.

A பாத்திரம் :- ..........................................

A+B பாத்திரம்:- ........................................

A+B+C பாத்திரம் :- ....................................

A+B+C+D பாத்திரம் :- ..................................

39. இக்கோலத்தைப் பாருங்கள்.




இக்கோலத்திற்கேற்ப விடையாக வரக்கூடிய பொருத்தமான உரு யாது?




இப்படவரைபினைப் பாருங்கள்.




மாம்பழங்களின் எண்ணிக்கையை இப்படவரைபு காட்டுகிறது.
10 மாம்பழங்களை உரு ஒன்று குறிக்கிறது.

40. அதிக எண்ணிக்கையான மாம்பழங்கள் விற்கப்பட்ட நாள் எது? ....................................................

41. திங்கட்கிழமை எத்தனை பழங்கள் விற்கப்பட்டன?...................

42. வியாழக்கிழமையை விட, திங்கட்கிழமை எத்தனை பழங்கள் கூடுதலாக விற்கப்பட்டன? ..........................................

43. ஆகக் குறைந்த எண்ணிக்கையான மாம்பழங்கள் விற்கப்பட்ட நாள் எது? ....................................................

44. ஐந்து நாட்களிலும் விற்கப்பட்ட மாம்பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது? ...........................................



45. நேரம் 3.55 ஐ இக்கடிகார முகத்தில் வரைந்து காட்டுங்கள் (முட்களைத் தெளிவாக வரையுங்கள்)

46. பிற்பகல் 9.08 எனும் நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேர மாக எழுதுங்கள். ..............................................

47. பச்சைநிறமுள்ள இரண்டு காசுத்தாள்கள் எவை?

(1) ..........................................................

(2) ..........................................................

கீழ் வரும் உரைப்பகுதியை வாசித்து இல 1 முதல் 7 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

சபரியின் கதை இராமாயணத்தில் இடம்பெறும் கிளைக்கதையாகும். இவள் வேடுவ குலத்தைச் சேர்ந்தவள். மாதங்க முனிவரை தன் குருவாக ஏற்று இராமபிரானையே துதி பாடி வாழ்ந்து வந்தவள். வயது கடந்த காலத்தில் இராமஇலக்குமணனைச் சந்திக்கிறாள். விருந்தோம்பி மகிழ்கிறாள். இராமஇலக்குமணரைக் கண்டு விருந் தோம்பிய நிகழ்ச்சியுடனேயே சபரியும் இறைபதம் அடைகிறாள்.

48. சபரியின் கதை எதில் இடம்பெறும் கிளைக் கதையாகும்? ..............................................................

49. சபரி எக்குலத்தைச் சேர்ந்தவர்? ..................................

50. சபரியின் குரு யார்? ..............................................

51. மேலேயுள்ள பந்தியில் குறிப்பிடப்படும் வினைச்சொல் ஒன்றை எழுதுக? ...........................................................

52. மேலேயுள்ள பந்தியில் குறிப்பிடப்படும் பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக? ..............................................................

53. விருந்தோம்பி என்பதைப் பிரித்து எழுதுக. ........................ ............................. + ..............................

54. எந்நிகழ்வுடன் சபரி இறைபதம் அடைந்தார்? ......................

கீழே தரப்பட்டுள்ள பாடல்களை வாசித்து இல 1 முதல் 4 வரையிலான வினாக்களுக்கு விடைகளை எழுதுக.

55.

காலை மாலை எப்பொழுதும்
கடவுள் நினைவை கொண்டவராம்.
வேலை இன்றிச் சிறுபொழுதும்
வீணாய்ப் போக்கமாட்டாராம்
கண்ணிற் சிறந்த விடுதலையைக்
கருதிவாழ்ந்தார் நம்தாத்தா
மண்ணில் யாவர் வாழ்விற்கும்
வழிகாட்டிடுவார் நம்தாத்தா

கீழ் வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒத்த கருத்துடைய வேறு சொல்லைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. மாலை - ..................................................

2. கடவுள் - ...............................................

3. கண் - ..................................................

4. மண் - ..................................................

கீழ் வரும் ஒவ்வொரு சொல்லினதும் எதிர்ச்சொல்லைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

காலை :- ...................... நினைவு:- ......................

உண்மை:- ...................... நீதி:- ......................

K.T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

இங்கே மடிக்கவும்

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை -2004

## தமிழ்மொழியும் இலக்கியமும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

### பொற்கிழி

வினா

- பொற்கிழிகள் அறுந்து விழவேண்டி ஔவைப் பெருமாட்டியார் பாடிய பாடல்களில் ஈதல் பற்றியும் நீதிமன்றத்தில் வழக்காடுதல் பற்றியும் கூறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

### காவியத் தலைவி கதீஜா நாயகி

வினா

- காவியத் தலைவி கதீஜா நாயகியின் குணநலன்களை உமறுப் புலவர் கூறியிருக்குமாற்றை விளக்குக?

### மழைப்பாட்டு மகிமை

வினா

- மழைப்பாட்டிலே ஆங்காங்கே உவமைச் சுவை ஊடுருவி நிற்கக் காணலாம் ஆராய்க?

### தங்கம்மா

வினா

- தங்கம்மா பற்றிய கவிதையில் அச்சும்மாவின் உருவத் தோற்ற வருணனை பற்றி விபரமாக எழுதுக?

வறுமையின் கொடுமை தங்கம்மாவையும், அவளது குடும்பத்தினரையும் எப்படியெல்லாம் பாதித்தது என்பதை விவரிக்க.

- இதனைக் கவிஞர் எடுத்துக் கூறியிருக்கும் முறையிலுள்ள சிறப்புக்களைக் குறிப்பிடுக.

### உவமை நயம்

வினா

- "கம்பரும் சேக்கிழாரும் உவமையைக் கையாளுவதில் இணை யற்றவர்கள்" இக் கூற்றினை "உவமை நயம்" என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க?

### வள்ளுவரும் பாரதியாரும்

வினா

- வள்ளுவரும், பாரதியாரும் என்னும் கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு பின்வருவன தொடர்பாக வள்ளவர் கூறிய கருத்துக்களை பாரதியார் அடியொற்றிச் சொல்லுமாற்றை விளக்குக.
- பொருளிலார்
- சினம்
- அறம்

### கணையாழி

சந்தர்ப்பம் கூறல்

- "நில் அங்கே நீ விதைத்ததைத் தானே அறுவடை செய்கிறாய் சகுந்தலா. நீ பதிவிரதை என்பது உண்மையானால் நீ பதிவிட்டில் இருப்பதே மேல்"

1. இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
2. இக்கூற்றில் இரு வேறு உணர்வுகள் வெளிப்பட்டு நிற்கின்றன. அவற்றுள் ஒன்றை எழுதுக?
3. "நீ விதைத்ததைத் தானே அறுவடை செய்கிறாய்" இது குறிப்பாக எதனை உணர்த்துகின்றது?
4. பதி என்பது இங்கு என்ன பொருளில் வந்துள்ளது?

வினா

- சகுந்தலை - துஷ்யந்தன் கதையில் கணையாழி பெறும் முக்கி யத்துவத்தை ஆராய்க?

சந்தர்ப்பம் கூறல்

- "பயன் முழுமையாகக் கிட்டவில்லை. முனிவர் சிறிது இரங்கி அருள் செய்தார். நான் இட்ட சாபத்துக்கு விமோசனம் கிடையாது என்றாலும், இந்த விடயத்தில் சகுந்தலையின் கணவன் அவளுக்கு கொடுத்த அணிகலன் ஒன்றை அவன் காண நேரிட்டால், நாளிட்ட சாபமும் நீங்கும் என்று சொல்லி அவ்விடத்தை விட்டு நீங்கினார்"

1. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2. யாருக்கு கூறப்பட்டது?
3. இங்கு குறிப்பிடப்படும் முனிவர் யார்?
4. சகுந்தலையின் கணவன் பெயர் யாது?

வினா

கண்ணுவ முனிவர் சகுந்தலை மீது வைத்திருந்த பாசம் அளவிடக் கரியது விரித்துரைக்க?

### அறிவுடைநம்பி

சந்தர்ப்பம் கூறல்

- "அறிவுக் கூர்மைக்கும், வயதுக்கும் தொடர்பு இல்லை என்பதை உங்களால் உணர்ந்து கொண்டோம். எங்கள் அறிவுக் கண்கள் திறந்தன"

1. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2. யாருக்கு கூறப்பட்டது?
3. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
4. 'கண் திறத்தல்' என்ற மரபுத் தொடரின் பொருள் யாது?

வினா

- அறிவுடைநம்பி கதையை ஆதாரமாகக் கொண்டு பூங்குன்றன், இளநாகன் ஆகியோரது குணாதிசயங்களை ஆராய்க?

சந்தர்ப்பம் கூறல்

- "நீதி வழுவாத நம் சோழ அரசரிடம் சொல்லுங்கள். உங்கள் வழக்கிற்கு அங்கே நல்ல தீர்ப்புக் கிடைக்கும்"

1. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
3. இங்கு குறிப்பிடப்படும் வழக்கில் சம்பந்தப்பட்ட இருவரினதும் பெயர்களைத் தருக?
4. இங்கு குறிப்பிடப்படும் சோழ மன்னனின் பெயர் யாது?

சந்தர்ப்பம் கூறல்

- " ........ குழப்பமான நம் வழக்கை ஆராய்ந்து இந்தச் சிறுவனா தீர்ப்பு வழங்கப் போகின்றான்"

1. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2. யாருக்கு கூறப்பட்டது?
3. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
4. இங்கு குறிப்பிடப்படும் வழக்கு எது தொடர்பானது?

### மணிமேகலை

வினா

- மணிமேகலைக் கதையில் மணிமேகலா தெய்வம் பெறும் முக்கியத் துவம் பற்றி விபரிக்குக?
- மணிமேகலா தெய்வம் மணிமேகலையைக் கொண்டு சென்று மணிபல்லவத்தில் வைத்தமைக்கான பிரதான காரணங்கள் எவை என ஆதாரத்துடன் விளக்குக?
- மணி பல்லவத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளை விபரிக்குக?

சந்தர்ப்பம் கூறல்

- "இப்பாத்திரம் ஆபுத்திரனிடம் இருந்து இங்கு வந்தது. இது கொண்டு உலகத்தின் பசியைப் போக்கும் தருமத்தை நீ செய்யவேண்டும்"

1. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2. யாருக்கு கூறப்பட்டது?
3. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
4. இங்கு குறிப்பிடப்படும் பாத்திரம் எது?

# போரியல் வரலாற்றின் முக்கிய சான்றுகளை 'போர் நடந்த மண்ணில்' வெளிப்படுத்தியுள்ளது

## வெளியீட்டு விழாவில் சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம்



(யாழ்ப்பாணம்)

போராளிகளின் ஆற்றல்கள், உள்ளத்து உணர்வுகள், பொதுமக்களின் உணர்வுகள், சமகால வரலாற்றை எழுதுவதற்கான முக்கிய சான்றுகளை வெளிப்படுத்துவதாகப் போர் நடந்த மண்ணில் என்ற நூல் விளங்குகிறது.

என போர்நடந்த மண்ணில் நூல் வெளியீட்டு விழாவில் மதிப்பீட்டுரையை நிகழ்த்திய சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் -

'கலை இலக்கியப்படைப்புகள் மக்களைச் சிந்திக்க, தூண்டவேண்டும். பழைமையிலும், பொய்மையிலும் சிறைபட்டுக் கிடக்கும் மக்கள் மனதில் புரட்சிகரமான பார்வையைத் தோற்றுவிக்க வேண்டும். மாறிவரும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்' என்ற தேசியத் தலைவரின் முன்னோடி வாக்கியத்திற்கேற்ப இந்தப் போராட்ட வரலாற்றிலே, களத்திலே போராளிகள் எத்தனை சாதனை படைத்துள்ளார்களோ - அதனைப் போன்று கலை, இலக்கியப் படைப்புக்களினூடாகவும் அபரிமிதமான பங்களிப்பை ஆற்றியிருக்கிறார்கள்.

இவர்களோடு பல பொதுமக்களின் இலக்கியங்களும் புரட்சிகரமானதாக ஆக்கப்பட்டுள்ளன. இது பாராட்டுக்குரியதாகும்.

இந்தப் போராட்ட இலக்கியத்தை மூன்று வகையாக ஆய்வாளர்கள் பிரிக்கின்றார்கள். போரியல் இலக்கியம், போர்க்கால இலக்கியம், போராட்ட இலக்கியம் என்பனவே அவையாகும். 1984 ஆம் ஆண்டு கொக்கிளாய் இராணுவ முகாம் தகர்க்கப்பட்டபோது சுபாஸ் என்ற போராளி எழுதிய 'விடிவிற்கு முந்திய மரணம்' என்ற நூலும், மலரவனின் படைப்புக்களும், மாலதி படையணிப் பெண் போராளிகளின் ஆக்கங்களும், தூயவனுடைய படைப்புக்களும், சாள்ஸ் அன்ரனி பிரிவினருடைய படைப்புக்களும், சிறந்த போரியல் இலக்கியங்களாகக் கொள்ளத்தக்கன. இன்னும் பல போராளிகள் போரியல் இலக்கியங்களைப் படைத்துக்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக போர்க்கால இலக்கியங்களைப் பார்க்கின்றபோது, இதுவும் ஒரு முக்கியமான இலக்கியம் என்பதோடு, இதிலும் கூடுதலான இலக்கியத்தை போராளிகள் தான் படைத்திருக்கிறார்கள். புதுவை இரத்தினதுரையின் 'நினைவழியா நாட்கள்', 'உலைக்களம்' காசி ஆனந்தனின் "தமிழன் கனவு', 'படகோட்டிப் பாடல்' அத்தோடு தேனிசை செல்லப்பாவின் குரலில் இன்று ஒலித்துக் கொண்டிருக்கும் இசைப்பாடல்கள், கப்டன் வானதி, கப்டன் கஸ்தூரி, மேஜர் பாரதி, இவர்களோடு தற்போது வீரா போன்ற போராளிகளின் உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடுகள், சிறந்த போர்க்கால இலக்கியங்களாகக் கொள்ளத்தக்கவை.

முதலாவது ஆனையிறவுப் போரின்போது, ஆற்றல்மிகுந்த பல பெண் கவிஞர்களை நாம் இழந்துவிட்டோம. 'எழுதாத என்கவிதையை எழுதிச் செல்லுங்கள்' என்று கவிதை வடித்த கப்டன் வானதி, பனை மரத்தைக கவசமாக வைத்துத் தான் எதிரியுடன் போராடிய சம்பவத்தை எடுத்து இயம்புவதற்காக அந்தப் பனை மரத்தைச் சாட்சியாகக் கொண்டு எழுதியிருக்கிறார்.

சங்ககாலப் புலவர்கள் மரங்களைச் சாட்சியாக வைத்து அகத்திணைப் பாடல்களை ஆக்கியுள்ளதைப் போன்று, நீண்ட நெடுங்காலமாக அகத்திணைக்குரிய பொருள் மரபாகக் கருதப்பட்டு வந்த ஒரு மரபினை புறத்திணைக்கு கருவாகக் கொண்டதன்மை மிகவும் பாராட்டுக்குரியது.

இன்றும் இந்த இலக்கிய ஆக்கங்கள் வரிசையிலே தமிழ்க் கவியின் வானம் வெளித்துவிடும், இருள் விலகிவிடும், போன்ற கவிதை இலக்கியங்களும், மலைமகளின் நூல்களும் சிறந்த போராட்ட இலக்கியங்களாகக் கருதக்கூடியன. இந்த மூன்று இலக்கியங்களிலும் தொட்டவர், சங்கர் என்ற பெயரிலுள்ள பசீர்காக்கா ஆவார் இவரது 'போராளியின் டயரி', 'சிறைப்படாத சிந்தனை', என்பன பாராட்டுக்குரிய போராட்ட இலக்கியங்களாகும்.

1985, 86, 87 காலப்பகுதியில் தியாகி திலீபன், கேணல் கிட்டு ஆகியோரின் ஏற்பாட்டில், வீதிகளெங்கும் தெருக்கூத்துக்கள் நடத்தப்பட்டன. திலீபனால் புரவிக்கூத்து என்ற கலைவடிவம் அறிமுகப்படுத்தப்பட்டது. மறைந்த குகராஜா போன்றோர் இதில் பங்கெடுத்திருந்தனர்.

இத்தோடு வில்லிசைக் கலைஞர் சின்னமணியின் போர்க்கால வில்லிசை நிகழ்வுகள், போன்ற ஆற்றுகை இலக்கியங்களும் தமிழ்நாட்டு ஓவியர் சந்தானம், பயஸ், செம்மலையான், விக்னேஸ்வரன் போன்றோரின் ஓவியங்களும் போராட்டத்தை வளர்க்கும் அழகியற் கலைகளாகவும் உள்ளன. அத்தோடு எமது போராளிகள் நுண்கலைகளிலும் சிறந்து விளங்கியுள்ளனர், விளங்குகின்றனர்.

அத்தோடு இன்று உலகத்தில் அறிமுகமாகின்ற அதிநவீன சாதனங்களைக் கொண்டு போராட்ட வரலாறுகளை ஒளிப்படங்களாகப் பதிவுசெய்து அதனை ஒரு இராணுவ வளர்ச்சிக்கு பயன்படுத்தும ஆற்றல் பாராட்டுக்குரியதாகும். பரதனின் காற்றுவெளி என்ற வீடியோத் திரைபபடம், கேசவராஜா, ஞானரதன் போன்றோரின் படைப்புக்கள் சிறந்த உதாரணங்களாகும்.

அத்தோடு அச்சு ஊடகம் பெற்றெடுத்த குழந்தையாகிய பத்திரிகைகளின் மூலம் விடுதலைப் போராட்டம் வளர்ச்சிகண்டுவருகிறது.

இவ்வாறு போரியல் இலக்கியம், போர்க்கால இலக்கியம், போராட்ட இலக்கயம் ஆகிய மூன்றுமாக ஏராளமான படைப்புக்களை போராளிகளும், பொதுமக்களும் இவற்றின் மூலம் இவர்களது அனுபவ வெளிப்பாடுகளை நாம் பார்ப்பதோடு, இவை மாறிவரும் சமூகத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடியவையாக உள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

### அனுமதிப்பத்திரம் மீண்டெடுப்பு

சங்கானைப் பிரதேசத்தைச் சேர்ந்த எஸ்.சுதாகரன் என்பவரது மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம் கண்டெடுக்கப்பட்டு நல்லூர் பிரதேச செயலக்திில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

NPGP 7732 இலக்கமுடைய ஹொண்டா மோட்டார் சைக்கிளுக்கான, 2004 ஆம் ஆண்டுக்கான அனுமதிப பத்திரமே நல்லூர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கு உரித்துடையவர் தகுந்த ஆதாரம்காட்டி அலுவலகத்தில் இந்த அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலகத்தினர் கேட்டுள்ளனர்.

### குமரப்பா புலேந்திரன் நினைவுதினம்

(வடமராட்சி)

குமரப்பா புலேந்திரன் உட்பட 12 மாவீரர்களின் நினைவுநாளான எதிர் வரும் 5 ஆம் திகதி சிறப்பு நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

17 ஆம் ஆண்டு நினைவுதினமான ஒக்ரோபர் 5 ஆம் திகதி வல்வெட்டித்துறை தீருவிலில் உள்ள குமரப்பா புலேந்திரன் நினைவுத் தூபிப் பகுதியில் இந்த நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இதற்கான ஏற்பாடுகளை வடமராட்சி வடக்கு வல்வெட்டித்துறை கடற்தொழிலாளர் சங்கங்கள் மேற்கொண்டுவருகின்றன. (14)

### கலாசார மண்டபம் அமைப்பு

(வடமராட்சி)

திக்கம் பகுதியில் 30 லட்சம் ரூபா செலவில் கலாசார மண்டபம் அமைக்கப்பட்டுவருகிறது.

இந்த மண்டபம் திக்கம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வெளிநாட்டில் வாழும் மக்களே இந்த நிதியுதவியைச் செய்துவருகின்றனர் என்றும், பல பொது மண்டபங்கள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (17)

## மின்விளக்குகள் இன்மையால் இரவுப் போக்குவரத்து சிரமம்!

சுன்னாகம் மின்சாரநிலைய எல்லைக்குட்பட்ட உடுவில் அம்பலவாணர் வீதிக்கு முழுமையாக மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை. சுன்னாகம் றொட்டியாலடியில் இருந்து ஆரம்பித்து கற்பொக்கணைப் பிள்ளையார் ஆலயம்வரை செல்லும் இந்த மிக நீண்டதும், வளைவுகளைக் கொண்டதுமான பாதையில் சிலரின் வீடுகள், கடைகளுக்கு முன்பாக ரியூப்லைற் பொருத்தப்பட்டிருப்பதாகவும், இந்தத்தெருவின் ஒரு பகுதிக்கு மட்டும் இன்னமும் ரியூப் லைற் பொருத்தப்படவில்லை எனவும், அந்தப்பகுதி மக்கள் முறையிட்டுள்ளனர்.

இருள்நிறைந்த வளைவுகளையுடைய இந்தப் பாதையில் அடிக்கடி விபத்துக்களும், திருட்டுச் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. எனவே அம்பலவாணர் வீதியின் முடிவுவரை மின்விளக்குகள் அமைத்து மக்களின் இரவுநேரப் போக்குவரத்துக்கு மின்சார சபையினர் உதவவேண்டுமென அந்தப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (101)

### கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு

(வடமராட்சி)

மந்திகை அரசினர் வைத்தியசாலை வளவில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதகரித்துள்ளது.

வைத்தியசாலைக்குவரும் நோயாளர்கள, ஊழியர்களை இவை பெருஞ் சிரமப்படுத்திவருகின்றன. இது குறித்து வைத்தியசாலை நிர்வாகமோ, பிரதேசசபையோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பருத்தித்துறை பிரதேசத்தில் பரவலாகக் கட்டாக்காலி நாய்கள் அதிகரித்துள்ளன. இதனைக் கட்டுப்படுத்த பிரதேச சபை எந்தவித நடவடிக்கையும் எடுக்காதது குறித்து மக்கள விசனம் தெரிவித்துள்ளனர். (14)

## புதிய செங்குந்தா வீதி புனரமைப்புப் பணி பூர்த்தி

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட புதிய செங்குந்தா வீதி முழுமையாகத் திருத்திமுடிக்கப்பட்டுள்ளது. நீண்ட பல மாதங்களாகத் இந்தப் பரதான வீதி திருததப்படாமல் இருந்துவந்தது. இந்தவீதி தொடர்பாகப் பொதுமக்கள் பலமுறை முறைப்பாடு செய்தும் இந்தப் பிரதேச பொது மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்காமையால் இந்த நடவடிக்கை இழுத்தடிக்கப்பட்டு வந்தது.

பின்பு நல்லூர் பிரதேச சபை மேற்கொண்ட கடும் முயற்சியால் பிரதேச சபையின் நிதியில் இருந்து 7 லட்சம் ரூபா செலவில் இந்தவீதி பூரணமாகத் திருத்திமுடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறே நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பல வீதிகள் திருத்திமுடிவடையும் நிலையில் உள்ளதாகவும், தற்போது பெய்து வரும் மழை காரணமாக இந்தப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் நல்லூர் பிரதேச சபை செயலாளர் பொ.வைரமுத்து தெரிவித்தார்.

## ஆங்கில அறிவை மேம்படுத்த சாவகச்சேரியில் வகுப்புகள்!

(சாவகச்சேரி)

தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கம் தென்மராட்சி மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யும் நோக்கில் ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்களை விரைவில் நடத்தவுள்ளது.

இதில் சிறுவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள், பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள், பல்கலைக்கழகம் செல்வோருக்கான உயர்தர ஆங்கில வகுப்புக்கள், உத்தியோகத்தர்களுக்கான மாலைநேர, வார இறுதி நாள் வகுப்புக்கள் எனத் தரம் பிரிக்கப்பட்டு நடாத்தப்படவுள்ளன.

இதில் தகுதியான விரிவுரையாளர்கள் கலந்துகொண்டு விரிவுரையாற்ற உள்ளனர். இதில் சேர்ந்து கொள்ள விரும்புபவர்கள், ஆர்வமுடையவர்கள் அலுவலகத்தில் பெயர்களைப் பதிவுசெய்யலாம்.

இது தொடர்பான மேலதிக விபரங்களைச் சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடியில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என மக்கள் நலச் சேவைகள் சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.



வலி.தென்மேற்கு பிரதேசசபை உப அலுவலகங்களில் கடமையாற்றி வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம்பெற்றுச்சென்ற ச.புஸ்பராணி, அன்பழகன், ந.ஜெயசீலன், செ.மனோகரன், செ.பரமநாயகம் ஆகியோர் இந்தமாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற பிரியாவிடை உபசார நிகழ்வின்போது சக ஊழியர்களால் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். (48)

## ஆண்களைப் போலப் பெண்களும் தேச நிர்மாணத்துக்கு உதவவேண்டும்

### பெண்கள் சங்கம நிகழ்வில் பத்மினி சிதம்பரநாதன்

(யாழ்ப்பாணம்)

பெண்கள் தமது பிரச்சினைகளை தாமே எதிர்கொண்டு சமாளிக்கும் நிலை உருவாகும்போது தான், எமது சமூகத்தில் உள்ள பெண்கள் சம்பந்தமான பிரச்சினைகள் தீரும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்தார்.

கடந்த 25 ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற யாழ்.நல்லூர் கோட்ட மகளிர் சங்கம நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

அன்று தியாதி திலீபன் கூறிய மக்கள் புரட்சியின் ஒரு கட்டமாகத் தான் பொங்குதமிழ் நடைபெற்றது.

இந்த நிகழ்வுபோல மேலும் பல நிகழ்வுகள் நடைபெறவேண்டும். பெண்கள் சங்கமம் மூலம் சமூகத்தில் ஆற்றல்மிக்க, புத்துணர்வுமிக்க மனிதர்களை உருவாக்கப்படவேண்டும். எமது தாயக விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு எவ்வளவு முக்கியமானதோ அதேயளவுக்கு சமூகத்தின் மாற்றத்திலும் தேவை என்பதை பெண்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

எமது தாயகத்தின் 70 சதவீதப் பகுதி எம்மிடம் உண்டு. நடந்து முடிந்த தேர்தலில் 96 சதவீதமானவர்கள் தேசிய ஒற்றுமைக்காக எமது சுதந்திர உணர்வுக்காக வாக்களித்துள்ளனர்.

ஆண்களுக்குச் சமமாகப் பெண்களின ஆற்றல் வளர்ந்துள்ளது. அவர்கள் சமூக நடைமுறையிலும் அந்த சமத்துவத்தைப் பெறவேண்டும். ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள மாதர் சங்கங்கள் விழிப்புக் குழுக்களாகச் செயற்பட்டு சமூகத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை, பெண்களுக்கு ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர்க்கவேண்டும்.

இது சமூகத்தில் உருவாகக் கூடிய பெண்கள் மீதான பழிச்சொற்களையும், தவறுகளையும் திருத்த உதவும். புரட்சிகரமான சமூகத்தை உருவாக்கியுள்ள தமிழீழ மண்ணில் பெண்களின் நிலை தடுமாறக் கூடாது. மேலும் வளர்த்தெடுக்கப்படுதல்வேண்டும்.

பெண்களிடம் எந்தக் காரியத்தையும் செம்மையாகச் செய்து முடிக்கும் ஆற்றல் உள்ளது. அவர்கள் அந்தத் திறமையை மேலும் வளர்த்துக்கொள்வதுடன், எமது பாரம்பரியமான சில மூடப்பழக்க வழக்கங்களுக்குள் அடிமைப்பட்டுவிடாமல் ஏனைய பெண்களுக்கும் வழிகாட்டிகளாக விளங்கவேண்டும்.

எமது பண்பாட்டிலுள்ள சில மூடநம்பிக்கைகள் நீக்கப்பட்டால் அது நிச்சயம் சிறப்பாக அமையும். எமது பண்பாட்டிலுள்ள சிலவற்றை மாற்றியமைக்க முதியோரும், இளையோரும் இணைந்து சில புதிய விடயங்களை உள்வாங்கிக்கொள்ள வேண்டும்.

எமது மக்களிடமே எமது நிர்வாகம் கிடைக்கக்கூடிய சூழல் உருவாகிவருகின்றது. அப்படியான நிலை உருவானால் ஆண்களுக்குச் சமமாக நின்று பெண்கள் எமது தேச நிர்மாணப் பணியில் ஈடுபடவேண்டும்.

பெண்களுக்கான சிறுகைத் தொழில் உட்பட பல வேலைத்திட்டங்களை வழங்கும் திட்டம் எம்மிடமுண்டு. விரைவில் அவற்றை நடைமுறைப்படுத்தவுள்ளோம். பெண்கள் என்றும் உயர்ந்து நிற்கவேண்டும். இதற்கு அந்தத் தொழில்சார் நடவடிக்கைகள் சிறப்பாக அமையும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.




## நலன்புரி நிலைய சிறார்கள் கொழும்புக்கு

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கி வாழும் 10 சிறுவர்கள் பெற்றோருடன் கொழும்பு செல்லவுள்ளனர்.

எதிர்வரும் ஒக்ரோபர் 1 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் சிறுவர் தினத்தில் - கவிதை, கட்டுரைப் போட்டிகளில் இவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இவர்கள் சிறுவர் தினத்தில் கலந்துகொள்வதற்கான ஒழுங்குகளை - மன்னார் மாவட்ட மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்டு வருகின்றது.

# நீர் வெளியேறும் வாய்க்காலில் மக்கள் குடியிருப்புக்கள் அமைப்பு

கிளிநொச்சி - கனகாம்பிகைக் குளத்திலிருந்து மேலதிக நீர் வெளியேறும் வாய்க்காலின் இருமருங்கிலும் தற்போது நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதனால் இனிவரும் காலங்களில் குளத்தில் இருந்து வெளியேறும் நீர் தேங்கி மக்கள் குடியிருப்புக்களைப் பாதிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்த ஆபத்தைக்கருத்தில் கொண்டு உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி அரச அதிபர், கரைச்சி பிரதேச செயலருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கனகாம்பிகைக்குளம் உருவாக்கப்பட்ட காலப்பகுதி முதல் இந்த வாய்க்கால் மூலமாகவே குளத்தின் மேலதிக நீர் வெளியேறி கிளிநொச்சிக் குளத்தைச் சென்றடைந்தது. தற்போது இந்தக் கால்வாய்க் கரையினை அண்மித்த பகுதிகளில் காணப்படும் கழிவுப் பகுதிகளில் மண்கள் கொட்டப்பட்டு நிலம் சீர் செய்யப்பட்டு, நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

இதன் காரணமாக நீர் செல்லும் வாய்க்கால்கள் அழிக்கப்படுகின்றது. அத்துடன் குளத்திலிருந்து வெளிச் செல்லும் மேலதிக நீர் குளத்தைச் சென்றடையமுடியாமல் தேங்கி நிற்கின்றது. இதனால் இந்த நீர் அயற் கிராமங்களுக்குள் புகக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டு வருகின்றது.

அண்மையிலுள்ள கிராமமான இரத்தினபுரம் கிராமத்தில் 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளப் பாதிப்புக்குள்ளாகி இடம்பெயர வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இதனால் இந்த விடயம் பற்றி சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இரத்தினபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மு.யோகராசா கேட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிக்கையில்-

நீர் செல்லும் வாய்க்கால்கள் மூடப்படுவதென்பது பாரிய பின்விளைவுகளை எதிர்காலத்தில் தோற்றுவிக்கும் எனவும், இது தொடர்பாக உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கரைச்சிப் பிரதேச செயலர் கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

## செயலமர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான செயல் நிலை ஆய்வுச் செயலமர்வு நேற்றுக் காலை ஆரம்பமாகியது. இந்த செயலமர்வு ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி வரை நடைபெறும்.

## உறுப்பினர் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கராத்தே சங்கத்தின் ஆரம்ப நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் கராத்தே ஆசிரியர் விஜயராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் ராஜா கருத்துரை நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் 25 இற்கு மேற்பட்ட கராத்தே வீரர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் கராத்தே சங்க உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

## மீளக்குடியமர்வு

வவுனியா செட்டிகுளம் உதவி அரச அதிபர் பிரிவின் 4 ஆயிரத்து ஏழு குடும்பங்கள் இதுவரையில் மீளக்குடியமர்ந்துள்ளன.

1990 ஆம் ஆண்டு இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையினால் இந்தப் பிரிவின் கீழ் இருந்த 6 ஆயிரத்து அறுநூற்று 61 குடும்பங்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசித்து வந்தனர். தற்பொழுது 4 ஆயிரத்து ஏழு குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளதாக வெண்கல செட்டிகுளம் உதவி அரச அதிபர் துரைச்சாமி தெரிவித்தார்.

# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆதரவில் வன்னியில் நலன் பேணல் பயிற்சிநெறி

(கிளிநொச்சி)

மனிதவள மேம்பாட்டுப் பகுதியுடன் இணைந்து சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் கிளிநொச்சி, மல்லாவி, புதுக்குடியிருப்புப் பிரதேசங்களில் 2 ஆம் கட்ட நலன்பேணல் பயிற்சிநெறி இந்த மாதம் நடைபெற்றது.

இந்தப் பயிற்சி வாலிப நிலையங்கள், உணவகங்கள், தங்ககங்கள், அரிசி ஆலைகள், வெதுப்பகங்கள், சந்தைகள் ஆகியவற்றில் பணியாற்றும் பல்வேறுபட்ட பணியாட்களுக்கும் வழங்கப்பட்டது.

இந்தப் பயிற்சிநெறியில் முதலுதவி, சுகாதார நடைமுறைகள், தொற்றுநோய்களும் தடுப்பும், மனித உடலமைப்புச் செயற்பாடும், பாதுகாப்பு தொடர்பான விரிவுரைகளும், செய்முறைகளும் வழங்கப்பட்டதோடு, நலன்பேணல் குழுக்கள் அமைத்து செயற்படுவதன் அவசியமும் விளக்கப்பட்டது.

இந்தப் பயிற்சிநெறிகளில் பங்குபற்றிய 100ற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கான மதிப்பீட்டுத் தேர்வு ஒன்றை நடத்துவதற்கு சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு திட்டமிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பயிற்சியின் நிறைவில் சான்றிதழ்கள் வழங்குவதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

# ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படுவதால் மாதாந்த கொடுப்பனவு பெறமுடியாத நிலை

துணுக்காய் வலயத்திலுள்ள பாடசாலை ஆசிரியர்கள் அடிக்கடி இடமாற்றம் செய்யப்படுவதால், அவர்கள் தமக்குரிய மாதாந்த கொடுப்பனவுகளை பெறமுடியாத நிலைமை காணப்படுகின்றது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, ஆசிரியர்கள் இடமாற்றத்தின் போது அதற்குரிய விடுகைப்பத்திரம், இடமாற்றப் பத்திரம் என்பவற்றை வலயக்கல்வி திணைக்களம் உரிய இடங்களுக்கு அனுப்பி வைப்பதில்லை என்றும், வலயக் கல்விப் பணிமனையின் அசமந்தப் போக்கே இதற்குக் காரணம் என்றும், பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

# வீதி புனரமைப்பு சீரின்மையால் ஆனந்தபுரம் மக்கள் பெரும் சிரமம்

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் வீதி சீரான திட்டமிடல் இல்லாமல் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இதனால் அந்தப் பகுதி மக்கள் பலத்த நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கிராமத்தில் வாழும் மக்களுக்கான முக்கிய தேவைகளை நிறைவு செய்யும் வீதிகளில் ஒன்றாக இந்த வீதி விளங்குகின்றது.

இந்த வீதி மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் காணப்பட்டது. தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந்த வீதி 2 அடி உயரத்துக்கு மேலாக மண்பரவி உயர்த்தப்பட்டு வருகின்றது. போடப்பட்ட மண்ணை இறுக்குவதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இதனால் அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இந்த வீதி தற்போது பெய்து வரும் மழை காரணமாக சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது. இதனால் இந்த வீதியூடாகப் போக்குவரத்துச் செய்ய முடியாமல் மாணவர்கள், நோயாளிகள் எனப் பலரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

# ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் கட்டடங்கள் சேதமுற்ற நிலையில்!

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய கட்டடங்கள் நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாத நிலையில் சேதமுற்று காணப்படுகிறன. இந்தப் பாடசாலையை புனரமைப்பதற்கு எந்த விதமான நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை என பாடசாலை அதிபர் கவலை தெரிவித்தார்.

கடந்த 1995 ஆம் ஆண்டு இராணுவத்தினர் மேற்கொண்ட போர் நடவடிக்கை மூலம் முற்றாக சேதமாக்கப்பட்ட ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தை புனரமைப்பு செய்வதற்கு இதுவரை எந்தவொரு நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. இதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தல் நடவடிக்கையை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

## - மன்னார் மாவட்டத்தில் -

# உவர்நீர் தடுப்பு அணை அமைப்பதற்கு யு.என்.டி.பி 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு

மன்னார் மாவட்டத்தில் கடல்நீர் உட்புகுவதை தடுக்கும் அணை அமைக்கப்படவுள்ளது.

மன்னார் - மூன்றாம் பிட்டிக் கிராமத்துக்குள் வேகமாகக் கடல்நீர் உட்புகுகின்றமையால் பயன்தரும் மரங்கள் அழிந்து வருவதுடன் நிலம் உவரடைந்து வருகிறது. இதனால் கிராமத்திலுள்ள குடியிருப்புக்கள் ஆபத்துக்களை எதிர்கொண்டு வருகின்றன.

இதனைத் தடுக்கும் முகமாக யு.என்.டி.பி. நிதி ஒதுக்கீட்டின் கீழ் 50 இலட்சம் ரூபா செலவில் உவர் நீர் தடுப்பு அணை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# புளியங்குளம் தனிநாயகம் வித்தியாலயம் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில்!

வவுனியா - இராமர் புளியங்குளம் தனிநாயகம் வித்தியாலயம் அடிப்படை வசதிகள் இன்றி பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

மிக நீண்டகாலமாக தனியார் காணி ஒன்றில் இயங்கி வரும் இந்தப் பாடசாலையில் போதிய வகுப்பறை வசதி இன்மையால் மாணவர்கள் மரநிழலில் இருந்து கல்விகற்று வருகின்றனர். தற்போது மழைகாலம் காரணமாக மரநிழலில் இருந்து கல்வி கற்க முடியாத நிலை காணப்படுகின்றது. மேலும் குடிநீர் வசதி இன்மை, கழிப்பறை வசதி இன்மை போன்ற அடிப்படை வசதிகள் இன்மையாலும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த நிலைப்பாடு தொடர்பாக வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு பலதடவைகள் சுட்டிககாட்டியும் பலன் எதுவும் கிடைக்கவில்லை என இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

# குடமுருட்டி ஆற்றின் பாலம் இடிந்து விழும் நிலையில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரி வீதியில் அமைந்துள்ள குடமுருட்டி ஆற்றின் பாலம் இடிந்து விழும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.

இந்தப் பாலம் சில மாதங்களுக்கு முன்னர் மக்கள் பிரயாணம் செய்ய முடியாத அளவுக்கு இடிந்து விழும் நிலையில் சேதமுற்று காணப்பட்டது. தற்காலிகமாக தகரங்கள் மூலம் புனரமைக்கப்பட்ட போதிலும் தற்பொழுது பாலம் இடிந்துவிழும் அபாய நிலையில் காணப்படுகின்றது.

இதனால் பிரயாணிகள் பெரும் உயிராபத்துக்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கையை எடுக்குமாறு இந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

# சொந்த கட்டடம் இன்மையால் இயங்க முடியாத முன்பள்ளிகள்

மன்னார் - அந்தோனியார்புரம் முன்பள்ளி இடநெருக்கடிகளின் மத்தியிலேயே இயங்கி வருகின்றது.

இந்த முன்பள்ளி நிரந்தரக் கட்டடம் இன்றி கிராம முன்னேற்ற சங்க கட்டடத்தில் 35 இற்கு மேற்பட்ட சிறார்களுடன் இயங்கி வருகின்றது. இந்த முன்பள்ளிக் கட்டடம் சேதமடைந்து காணப்படுவதனால் மழைநீர் உட்புகுகின்றது. இதனால் மாணவர்கள் நிலத்தில் இருந்து கற்க முடியாத நிலை காணப்படுகிறது.

இந்த முன்பள்ளிக்கான புதிய கட்டடம் அமைக்கும் பணி கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டும் இன்னும் முடிவடையாத நிலையில் காணப்படுகின்றது.

இதேவேளை பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் புலோப்பளை, கோவில் வயல் ஆகிய இடங்களில் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. எனினும் இதுவரை முன்பள்ளிகளுக்கான கட்டட வேலைகள் எதுவும் இடம்பெறவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாண்டியன்குளம், நெட்டாங்கண்டல், மூன்றுமுறிப்பு ஆகிய பிரதேசங்களில் உள்ள முன்பள்ளிகளும் மிக மோசமாக சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. இவற்றை புனரமைப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# முள்ளிக்குளம் பிரதேச புனரமைப்புக்கு 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம் பிரதேசத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கையில் மன்னார் சமூக அபிவிருத்தி நிதியம் ஈடுபட்டு வருகின்றது.

இந்த புனரமைப்பிற்காக 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு குடிநீர்வசதி, மலசலகூடவசதி, பொதுக் கிணறுகள் அமைத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் வழிகாட்டலிலே இந்தப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தப் பணிகளை சமூக அபிவிருத்தி நிதியத்தின் மாவட்ட அமைப்பாளர் எம்.ஏ.குரு மேற்பார்வை செய்தார்.

# சிறுபோக நெல் விவசாயம் பருவமழையால் பாதிப்பு

புதுக்குடியிருப்பில் தற்போது பெய்து வரும் தொடர்மழை காரணமாக இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கை பெரும் அழிவுக்குள்ளாகி வருகின்றது. இதனால் விவசாயிகள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகி வருகின்றனர். பாரிய கஷ்டங்களுக்கு மத்தியில் அறுவடை மேற்கொண்டு வரும் வேளையில் தொடர் மழை காரணமாக கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அறுவடையை மேற்கொள்வதற்கு போதியளவு ஆளணியில்லாமையால் பெரும் நெருக்கடிக்குள் விவசாயிகள் உள்ளாயினர். இந்த நிலை தொடருமானால் அறுவடையை மேற்கொள்ளாமலேயே பயிர்கள் அழிவடையலாம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்*
*அதுநோக்கி வாழ்வார் பலர்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## மனித உரிமை அதிகாரிகளுக்கு விழுந்த அடி!

இலங்கையில் மனித உரிமைகள் எவ்வாறு மதிக்கப்படுகின்றது என்பதற்கு நேற்று முன்தினம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற சம்பவம் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கைதி ஒருவர் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுத் தாக்கிச் சித்திரவதை செய்யப்பட்டது தொடர்பாக, கிடைத்த தகவல் சம்மந்தமாக விசாரணை செய்வதற்காகப் பொலிஸ் நிலையம் சென்ற இலங்கை மனிதஉரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாணத்துக்கான இணைப்பதிகாரி ருவான் சந்திரசேகர, விசாரணை அதிகாா எஸ்.பெரோஸ், மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பதிகாரியாகப் பணியாற்றும் ஐ.நா.அபிவிருத்தித் திட்ட அலுவலர் பற்றிக் ஆகியோர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் வைத்தே பொலிஸாரால் தாக்கப்பட்டனர்.

இங்கே கவனமாகக் கருத்திற் கொள்ளப்படவேண்டிய விடயம என்னவென்றால், தாக்கப்பட்டவர்கள் மனித உரிமைகள் தொடர்பான பணிகளில் ஈடுபட்டுள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் என்பதும், தாக்கியவர்கள் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் பொறுபபுக்குரியவர்கள் என்று வர்ணிக்கப்படும் பொலிஸ் துறையைச் சேர்ந்தவர்கள் என்பதுமேயாகும்.

இலங்கையில் சந்தேகத்தின் பேரில் கைதாகும் அப்பாவிகள் பலர் விசாரணையென்ற பேரில் எத்தகைய அனுகு முறைகளுக்குள்ளாக்கப்படுகின்றனர் என்பது விபரித்து கூறுவதன் மூலம் அறியப்படவேண்டியதொன்றல்ல.

மனித உயிர்களுக்கு மதிப்பளிக்காத, உரிமைகளுக்கு அங்கீகாரமளிக்காத, ஒரு கட்டமைப்பாக இலங்கையின் பாதுகாப்புத் துறை தன்னிச்சையாக செயற்பட்டுவருவதும், அதற்கு ஆளும் அதிகார வர்க்கத்தின் மறைமுக ஆசீர்வாதம் இருப்பதும் கடந்த சில தசாப்தகால நிகழ்வுகள் மூலம் பகிரங்கமான உண்மைகளாகும்.

சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் இதனை தமது அறிக்கைகளிலும், கண்டனங்களிலும் தெரியப்படுத்தி வந்துள்ள போதிலும் - அரசோ, பாதுகாப்புக் கட்டமைப்புக்களோ அதனைப் பற்றி அக்கறை எதனையும் கொண்டதாகத் தெரியவில்லை.

அப்படியான அக்கறை ஏதும் இருந்திருப்பின் - மனித உரிமைகள் தொடர்பான உத்தியோகத்தர்களே அடிவாங்குமளவுக்கு நிலைமை இந்த அளவுக்கு மோசமாகப்போயிருக்காது.

கடந்த சில தசாப்பதங்களாக தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்கான போராட்டத்தினை பயங்கரவாதிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளாக சர்வதேச அளவில் பிரசாரம் செய்துகொண்டே இலங்கை அரசானது தனது பொலிஸ் படையுட்பட அனைத்து ஆயுதப்படைகளையும் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு - குறிப்பாக தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகளை பயங்கரவாத முறியடிப்பு நடவடிக்கை என்ற பெயரில் ஆயுதமுனையில் மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நடவடிக்கைகளின்போது மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு, சோதனை மற்றும் தேடுதல் நடவடிக் கைகளின் போது கைதான எத்தனையோ அப்பாவி இளைஞர், யுவதிகள் விசாரணையென்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் எதுமின்றி, விடுதலையுமின்றி வருடக்கணக்கில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறைவைக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறற்கொடுமைகள் இன்னமும் தொடரும் நாடென்ற பெருமை இலங்கைக்கு உண்டு.

இந்த மனித உரிமைமீறல்களை இன்னொரு பெயரில் கூறுவதானால் - ஒருவகையிலான உளவியல் நடவடிக்கையேயாகும். திட்டமிட்டமுறையில் வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் ஒன்றுமாகும்.

யாழ்.குடாநாடு இராணுவப் பிடிக்குள் சிக்கிய பின்னர் நடந்த மனித உரிமை மீறல்களுக்கு செம்மணி விவகாரம் இரத்தச்சான்றாகும். இந்தக்காலத்தில் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டோர்கள் பலர் காணாமற் போனவர்களான கதை பெரியது. அவர்கள் எப்படிக் காணாமற்போனார்கள் என்ற கதை சோமரத்ன ராஜபக்ஷ போன்ற சிலருக்கு விலாவாரியாகத் தெரியும்.

இவற்றை விபரிப்பது இங்கு நோக்கமல்ல. ஆனால் நினைவுபடுத்துதல் அவசியமாகின்றது. அதுவும் பொலிஸ் நிலையத்தில் வைத்தே தாக்கப்பட்ட மனித உரிமை அமைப்பினைச் சேந்தவர்களுக்கு இதனைக் கூறுவது மிகவும் அவசியமாகப்படுகின்றது.

பொய்யான குற்றச்சாட்டு அதனை நிரூபிக்க சித்திரவதை மூலம் பெறப்பட்ட போலியான ஒப்புதல் வாக்கு மூலம், காலவரையறையற்ற, விசாரணைகள் ஏதுமற்ற சிறைவாசம், சிறைக்கூடங்களில் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் வதைகள், பாலியல்ரீதியிலான துன்புறுத்தல்கள் சிலவேளைகளில் ஆளேயில்லாமற செய்யப்பட்டு காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கப்படுதல்... இவையெல்லாம் இலங்கை ஜனநாயகக் குடியரசின் மனித தர்மங்களாகப் பேணபபடும் அம்சங்களாகும்.

இவை குறித்த மக்களின் - அதுவும் பாதிக்கப்பட்ட மக்களின் கூக்குரல்கள் மனித உரிமை அமைப்புக்களுக்கு வழங்கப்பட்ட அவர்களின் மகஜர்களுள் அடங்கிப் ஒடுங்கிப் போவதே வழக்கமாகும்.

அல்லது அவர்களின் பதிவேடுகளில் பதிவாக்கப்பட்டு அறிக்கைகளாக வெளியிடப்படுவதுடன் முடிந்துபோகும் விடயமாவதுமுண்டு....

அடுத்த மனித உரிமை மீறல் குறித்த முறைப்பாட்டுக்காக அவர்கள் எப்போதும் தயாராகவே காத்திருப்பார்கள்.

ஆனால்... இந்த மனித உரிமை மீறல்களைத் தடுக்க என்ன கடுமையான நடவடிக்கைகளை எளடுத்தார்கள் என்ற கேள் விக்கு பதில் அர்த்தமற்ற ஒன்றாகவே வெளிவரும்...

இப்போது மனித உரிமைகள் அமைப்பினரின் மனித உரிமைகளுக்கே அடிவிழுந்திருக்கிறது. அவர்கள் தீர்க்கமாகவும், ஆழமாகவும் சிந்திக்கவேண்டிய கட்டம் இதுவேயாகும்.

## நாடும் நடப்பும்




# மரநடுகைத் திட்டத்தை முன்னிட்டு மாணவர்களிடையே போட்டிகள் !

(கொழும்பு)

எதிர்வரும் ஒக்ரோபர் 15 ஆம் திகதி தேசிய மரநடுகைத் தினமாக சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதோடு பாடசாலைமாணவர்கள் மத்தியில் மரநடுகைப் போட்டியொன்றினையும் அறிமுகப் படுத்தியுள்ளது.

இந்தப் போட்டியில் இணைந்து கொள்ள விரும்பும் பாடசாலை மாணவர் ஒருவர், ஒரு மரக்கன்று வீதம் நடுகைசெய்து அதனை ஐந்து வருடங்களுக்குத் தொடர்ச்சியாகப் பராமரித்து வரவேண்டும்.

பாடசாலை அதிபருடாக அறிவிக்கப்படும் பட்சத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அமைச்சு அதிகாரிகள் இதனைப் பார்வையிடுவார்கள்.

மேற்படி மரங்களைப் பராமரிப்பதிலும், காப்பதிலும் அந்த மாணவர் காட்டும் அக்கறை கவனிக்கப்பட்டு, மாணவர் உட்பட அவரது பெற்றோரது பெயர் மற்றும் அடையாள அட்டை இலக்கம் என்பன பொறிக்கப்பட்ட திணைக்கள அடையாள அட்டை ஒன்று சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சினால் வழங்கப் படவுள்ளது.

இந்த அடையாள அட்டையைப் பயன்படுத்தி இந்த அமைச்சின் கீழ்வரும் சகல தேசிய பூங்காக்கள், மிருகக்காட்சிச்சாலை போன்றவற்றை கட்டணம் செலுத்தாது பார்வையிடமுடியும்.

அத்துடன், மாவட்டரீதியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா, 15 ஆயிரம் ரூபா, 10 ஆயிரம் ரூபா வீதம் பணப்பரிசும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இது பற்றிய எதுவித அறிவுறுத்தல்களும் இதுவரை வழங்கப் படவில்லை.

இவ்வாறு மாணவர்களை மரநடுகையில் ஈடுபடச்செய்து அவர்களுக்கு பரிசில் வழங்கும் திட்டம் ஒன்று யாழ்.மாவட்டத்தில் 1992 - 93 காலப்பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் செயற்படுத்தப்பட்டதும், பங்குபற்றிய மாணவர்களுக்கு வங்கிகளில் பணம் வைப்புச்செய்த சேமிப்புப் புத்தகம் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (31)

## அதிகளவான குற்றச்செயல்கள் மேல் மாகாணத்தில் உள்ளதாம்

### ரட்ணசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த காலத்தில் மேல் மாகாணத்திலேயே அதிகளவிலான குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளதாக மக்கள் பாதுகாப்பு சட்டம் தொடர்பான அமைச்சரும், பதில் பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

குற்றச்செயல்களைத் தடுப்பது தொடர்பாக தேசிய ஆலோசனைச் சபையில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் - மாகாண மட்டத்தில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களையும் ஒருங்கிணைத்து விசேட செயற்திட்டம் ஒன்றை நடத்த அரசு தயாராகிவருகிறது.

இந்தச் செயற்திட்டம் அனைத்துப் பொதுமக்களின் ஒத்துழைப்புடனும் நடத்தப்படவிருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

## தொழிற்துறை திணைக்கள போதனாசிரியர்

## உள்ளக இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தொழிற்துறைத் திணைக்களத்தின் கீழ் கடமைபுரியும் போதனாசிரியர்களுக்கான வருடாந்த உள்ளக இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்துக்குள் ஒரு நிலையத்தில் 4 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றியோர் ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கு முன்பாக பிரேதேச செயலர் ஊடாக யாழ்.மாவட்ட தொழிற்துறை அலுவலரின் சிபார்சுடன் அனுப்பிவைக்கும்படியும், நான்கு வருடத்திற்கு மேற்பட்ட சேவைக்காலம் உடையோர் விண்ணப்பிக்காத பட்சத்தில் திணைக்களத்தினால் தீர்மானிக்கப்படும் இடத்திற்கு இடமாற்றப்படுவர் எனவும் - தொழிற்துறைத்திணைக்களப் பணிப்பாளர் ஆர்.விஸ்வலிங்கம் சகல பிரேதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார். (24)

## கண்ணிவெடி அபாயம் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தில் கண்ணிவெடி தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சர்வோதய நிறுவனத்தினரின் ஏற்பாட்டிலேயே இந்தக் கருத்தரங்கு ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. நல்லூர் பிரதேச செயலகத்தின் திட்டமிடற் பணிப்பாளர் ரவீந்திரசர்மாவின் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில், நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 40 கிராம அலுவலர் பிரிவிலிருந்தும் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

கண்ணிவெடிகள் சம்பந்தமாக கிராமசேவையாளர் மட்டத்திலே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதன்மூலம் மக்களுக்குச் செய்திகளைக் கொடுப்பதே இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கின் நோக்கமாக அமைந்ததாக நல்லூர் பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

# ஊரிப்பிட்டி மயானத்தில் மிதிவெடிகள் உள்ளனவா

## உறுதிசெய்யுமாறு கோரிக்கை

(மட்டுவில்)

மட்டுவில் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள ஊரிப்பிட்டி இந்து மயானத்தில் மிதிவெடிகள் உள்ளனவா எனப் பரிசோதித்து உறுதிசெய்து தரும்படி மட்டுவில் வடக்கு கிராம அபிவிருத்திச்சங்கம் - மிதிவெடி அகற்றும் நிறுவனமான 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்தைக் கோரியுள்ளது.

இந்தச் சங்கத்தினால் இந்த மயானத்தைச் சிரமதானம் மூலம் துப்பரவுசெய்து அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்று அபிவிருத்தி செய்வதற்கு வசதியாகவே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மயானப்பகுதி பற்றைகள் வளர்ந்தும், மண்டபம், கிணறு என்பன சேதமடைந்துமுள்ளன. இவற்றைச் சீர்செய்து சடலங்களைத் தகனஞ் செய்வதற்கான 'தகன மேடை' ஒன்றும் அமைக்கப்படவேண்டும் என்பதும், மயானத்தைச் சுற்றி வேலிய அமைத்து அதனைப் பாதுகாக்கவேண்டும் என்பதும் இப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இவற்றைச் செய்வதற்கு வசதியாகவே இந்த மயானத்தையும், சுற்றாடலையும் பரிசீலித்து மிதிவெடி அபாயமுள்ளதா என அறியத்தரும்படி கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (24)

ஆய்வு...

# சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம்; 'நேரி' அறிக்கை எழுப்பும் கேள்விகள்...




சேதுசமுத்திரக் கப்பல் கால்வாய்த் திட்டத்தால் சுற்றுப்புறத்திற்கு ஏற்படும் விளைவுகள் பற்றிய மதிப்பீடு என்ற அறிக்கையை தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக்கழகம் வெளியிட்டுள்ளது, இவ்வறிக்கையைத் தயார் செய்தது **National Environment Engineering Research Institute (NEERI)** என்ற அமைப்பாகும். தற்பொழுது பொதுமக்கள் பார்வைக்காக வெளியிடப்பட்டுள்ளது நேரி' அறிக்கையின் சுருக்கப்பட்ட வடிவம்தான். அந்த அறிக்கையில் அடங்கியுள்ள செய்திகளில் இருநது பின்வரும் கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளது.

1. சேதுசமுத்திரக் கால்வாயை சுயஸ், பனாமா போன்ற கால்வாய்களோடு ஒப்பிடுவது தவறு என்ற செய்தியை முதலில் சொல்லி விட வேண்டும். மேற்சொன்ன கால்வாய்கள் நிலத்தை வெட்டி கடல்களை இணைத்தவை. அதனால் அவை நிலப்பரப்பினால் வடிவம் கெடாமல் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால், சேது சமுத்திரக் கால்வாயோ கடலை ஆழப்படுத்துவதால், உருவாக்கப்படவுள்ளது. கடல் சூழல, நிலத்தின் சூழல் போன்றதல்ல. மிகவும கொந்தளிப்பான, மிகவும் விரைவாக மாறக் கூடிய தன்மைகொண்டது கடற் சூழலாகும். எனவே, கடலை ஆழப்படுத்துவதால் உண்டாகும் விளைவுகள் மிகவும் நுணுக்கமாகக் கவனிக்கப்பட வேண்டியவை மட்டுமல்ல, நாம் கணிகக முடியாத பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியது மாகும்.

பாக் ஜலசந்தியும், மன்னார் வளைகுடாவும் உயிரியல் ரீதியாக அதிக உற்பத்தி உள்ள இடங்கள் என்று நேரி அறிக்கை சொல்கிறது. நடைமுறைப்படுத்தவுள்ள கால்வாய் உள்ள பகுதியின் மொத்த அடிப்படை உற்பத்தி அளவு **(Gross primary productivity Value)** ஒரு நாளுக்கு 142 முதல் 472 மில்லி கிராம்/கன சென்ரிமீற்றர் என்று நேரியே மதிப்பிடுகிறது. நடைமுறைப்படுத்தப்பட உள்ள, கால்வாய் அமையவுள்ள ஆதம்ஸ் பாலப் பகுதியில் பவளப் பாறைகள் இல்லையென்று சொல்கின்ற அறிககை, கடல் விசிறி, கடற் பஞ்சு, முத்துச் சிப்பி, சங்குகள, கடல் பசு, டொல்பின் போன்ற மதிப்பு வாய்ந்த உயிரினங்கள் இருக்கின்றன என்பதை ஒப்புககொள்கிறது. ஆனால், கால்வாய் அமையவுள்ள பகுதியில் பொருளாதார ரீதியாகவும், சூழற்பாதுகாப்பு அடிப்படையிலும் முக்கியமான உயிரினங்கள் குறிப்பிடத்தக்க அளவிலில்லை என்று அறிவிக்கிறது.

எந்த விஞ்ஞானபூர்வ ஆதாரங்களின் அடிப்படையில், கால்வாய் அமையவுள்ள பகுதியில் முக்கியமான உயிரினங்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு இல்லை என்ற முடிவுக்கு நேரி வநதது என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், ஒரு விடயம் தெளிவாகப் புரிகிறது. ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாத பகுதி, பகுதியாகப் பிரிக்கப்பட்ட சூழல்களின் தொகுப்பு என்று கடற்சூழலை நேரி புரிந்து கொண்டுள்ளது. சூழல் நிலைமைகள் ஒன்றுக்கு ஒன்று தொடர்புள்ளவை. ஒரு பக்கத்தில் ஏற்படுத்தப்படும் சிறுபாதிப்பும் அதற்கே உரிய தாக்கத்தை அனைத்து பக்கத்திலும் ஏற்படுத்தும். சூழல் பற்றிய இந்த அடிப்படை விதியை நேரி கணக்கில் கொண்டதாகத் தெரியவில்லை.

எனவே, சூழற்தாக்கம் குறித்த நேரியின் அறிக்கை முழுமையானதல்ல. நேரி அறிக்கையின் சுருக்கப்பட்ட வடிவம்தான் இப்போது பொதுமக்களுக்குக் கிடைக்கிறது. நேரி அறிக்கையின் முழு விபரமும் பொது மக்களுக்குக் கிடைக்கும்படி செய்யப்பட வேண்டும்.

2. வங்காள விரிகுடாவில் இரண்டு சூழல் நீரோட்டங்கள் இருக்கின்றன என்று நேரி அறிக்கை ஒப்புக்கொள்கிறது. ஆனால், சகதிகள் நகரும் விபரத்தைப் பற்றிப் பேசும்போது, மன்னார் வளைகுடாவிலிருந்து பாக் ஜலசந்திக்கும் - பாக்ஜலசந்தியிலிருந்து மன்னார் வளைகுடாவுக்கும் இடையில் நடக்கும் சகதிப் பரிமாற்றத்தைப் பற்றி மட்டுமே பேசுகிறது.

வங்காள விரிகுடாவின் நீரோட்டங்கள் பற்றிய சில பொதுவான செய்திகளை இப்போது பார்ப்போம்.

எதிர்ப் புயல் நீரோட்டம் -ஆண்டின் அநேக மாதங்களிலும், வலிமையான புயல் நீரோட்டம் - நவம்பர் மாதத்திலும், வங்காள விரிகுடாவின் நீர்ச் சுழற்சியின் குணாம்சமாக இருக்கின்றது. (வடக்கு பூமத்திய நீரோட்டத்தின் நீட்சி என்பதாகத் தோன்றுகின்ற வடக்கு நோக்கிய கிழக்கிந்திய நீரோட்டம்) மே மாதத்திலும் 0.7-1.0 m.s.1 என்ற விசைவேகத்தில் (Velocity) நீடிக்கிறது. இந்த முக்கியம்சம் பற்றி இன்னமும் ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது. அது வளைகுடாவின் கிழக்காக ஓடும்போது, மழைக காலங்களுக்கு இடையிலான நீரோட்டமாகிறது. தென்மேற்குப் பருவமழையின் போது, முழு வளைகுடாவிலும் உள்ள நீரோட்டம் பல வீனமானதாக இருக்கிறது. ஒக்ரோபரில் பூமத்திய நீரோட்டம் - வளைகுடாவின் கிழக்கில் நுழையும் போது புயல் சுழற்சி உருவாக்கப்படுகிறது. குளிர் கால கிழக்கிந்திய நீரோட்டம் - ஆற்றல் மிகுந்த மேற்கு எல்லை நீரோட்டமாகும். அதன விசைவேகம் 1.0-m.s-1 என்ற அளவுக்கு மேலாகவே எப்போதும் இருக்கும். (http://indian ocean. free.fr/ann ual1.htm)

இந்த விபரங்களைப் பார்க்கும்போது கட்டுமானம் நடக்கவிருக்கும் பகுதியில் சகதி படிவது வேகமாக நடக்கும் என்றே தோன்றுகிறது. வாலிநோக்கம் கப்பல் உடைக்கும் துறைமுகத திற்கு கப்பல்களே நுழையமுடியாமல் மணல் படிவதை நாம் அறிவோம். அதே போன்ற நிகழ்வு சேதுசமுத்திரத்திற்கும் நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்? அவ்வாறு நிகழுமானால், சேதுசமுத்திரத்தில் போடப்பட்டபணம் உண்மையிலேயே கடலில் கொட்டிய பணமாகத் தான் இருக்கும்.

எனவே, சகதிகளின் இடப்பெயர்ச்சி பற்றிய தெள்ளத் தெளிவான மதிப்பீட்டுக்கு வருவது அவசியமாகும். மிக முக்கியமாக வங்காள விரிகுடாவிலிருந்து பாக்ஜலசந்திக்கும், தெற்குப் புறத்திலிருந்து மன்னார் வளைகுடாவுக்கும் சகதி இடப்பெயர்ச்சி நடைபெறுகிறதா? இல்லையா? என்பதை தெளிவான வார்த்தைகளில் நேரி குறிப்பிடவேண்டும்.

மேலும் அதி முக்கியமான இரண்டு விவரங்கள் குறித்தும் நாம் கேள்வி எழுப்ப வேண்டியிருக்கிறது.

✡ 300 மீற்றர் அகலமும், 10 மீற்றர் ஆழமும் உள்ள ஆழமான கால்வாய், நீரோட்டத்தின் மீது என்ன பாதிப்பு ஏற்படுத்தும் என்ற ஆய்வு செய்யப்பட்டதாக நேரியின் அறிக்கை சொல்லவில்லை. அதுபோன்ற ஆய்வுதான் சகதி படியும்முறை பற்றிய விபரத்தையும், அவ்வப்போது சகதி அகற்ற வேண்டிய வேலையைப் பற்றியும் விபரம் தரும். நீரோட்டத்தின் விசைவேகம் 0.2-0.4 மீற்றர்/வினாடி என்று அறிககை சொலகிறது. கடலோடிகளின் அனுபவம் இது மிகக் குறைவான மதிப்பீடு என்று சொல்கிறது.

✡ **Depth Integrated Velocity And Solute Transport (DIVAST)** என்ற மாதிரியைப் பயன் படுத்தி நீரியங்காற்றல் (Hydrodynamics) மாதிரி ஆய்வு செய்யப்பட்டதாக நேரி அறிக்கை சொல்கிறது. இந்த மாதிரியில் கணினி உதவியால் செய்யப்பட்ட சோதனைதான், கணினிக்குள் செலுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவு இது. இம்முறையின் இரட்டைப பரிமாண மாறுதல்களை மட்டுமே அறிய முடியும். அதாவது, நீரியங்கும் திசை மற்றும் வேகத்தை மட்டுமே அறியமுடியும். அலை உயர்வு என்ற மூன்றாவது பரிமாணத்தை இதனால் கணிக்க முடியாது. இந்த முறை கிடைமட்டத்திலான, ஒழுங்கற்ற நீரோட்டத்தைப்படிகக பொருத்தமானது. மேல்நோக்கி எழுகினற, ஒழுங்கற்ற நீரோட்டத்தைப் படிக்க, இந்த முறையைப் பயன்படுத்த முடியாது. ஒரு மீற்றர் உயரத்திற்கு அலையெழுகின்ற கடலின் இயக்கத்தைப் படிக்க இந்த முறையைப் பயன்படுத்துவது விவாதத்திற்குரிய ஒன்று.

✡ இந்தக் கடற்பகுதியின் பவளப் பாறைகளும, சகதி இடம் பெயர்வதும் நிலத்தின் நிலைத்ததன்மைக்கு அடிப்படையானவையாகும். கால்வாய்களைத் தோண்டுவதால் எழும் சகதிப் படிவு என்ன திசையில், எத்தனை தூரத்துக்கு நகரும், பவளப்பாறைகள் மீது என்னமாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நேரி அறிக்கை கூறவில்லை. மணல் துகள்களின் அளவு 125/m முதல் 600/m வரை என்று நேரி அறிக்கை சொல்கிறது. நீரோட்டததால் இந்தத் துகள்கள் பவளப் பாறைகளின் திசைக்கு அடித்துச்செல்லப்படும் என்றால், பவளப் பாறைகளுக்கு அத்தியாவசியமான 'தௌகிளியப்' பாறைகள் என்பது மிக நுண்ணிய உயிரகளின் தொகுப்பு. அவற்றைக் கொள்வதற்கு அவற்றுக்குள் மணல் நுழைவது போதுமானது.

✡ மன்னார் வளைகுடாவின் மீன்வளம் மிக முக்கியமானதாகும். இந்த மீன் வளத்தின் அடிப்படை இங்கே உள்ள பவளப்பாறைகள் தான். பவளப்பாறைகள் மீது விழும் சூரிய ஒளியைப் பயன்படுத்தி, இந்த நுண்ணுயிர்கள் (Zooxanthella) ஒளிச்சேர்க்கை நிகழ்த்தி, 'பிராண வாயுவை' உற்பத்தி செய்கின்றன. பிராண வாயுதான் அனைத்து உயிர்களின் இருப்புக்கான ஆதாரம். நீரின் ஒளிபுகும் தன்மை குறைந்தாலே பவளப்பாறைகள் இறந்துபோகும். இந்தப் பவளப்பாறைகள் - கடலின் மழைக்காடுகள் எனப்படுபவை. அவற்றை அழிப்பது வறண்ட தென்மாவட்டங்களை மேலும் வறட்சிக்குத் தள்ளும்.

3. ஆதம்பாலம் பகுதியிலுள்ள உயிர்ச் சூழல் முற்றிலும், எப்போதும் அழிந்து போகும் என்று அறிக்கை சொல்கிறது. ஆனால், மன்னார் வளைகுடாவின் 10,500 சதுரகிலோ மீற்றர் பரப்போடு ஒப்பிடும்போது, இந்த இழப்பு மிகவும் குறிப்பிடத்தக்க இழப்பு இல்லை என்றும் அறிக்கை சொல்கிறது. இந்த வாதத்தை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. ஏனென்றால், கடல் சூழலைத் தனித் தனியான சூழல் மண்டலங்களின் தொகுதி என்று நாம் பார்க்கமுடியாது. கடலைத் தோண்டி எடுக்கப்படும் மண்ணின் அளவு மிகப் 'பிரமாண்டமானதாகும். 32.5 மில்லியன் கனமீற்றர் மண்ணைத் தோண்டி எடுத்து, அப்புறப்படுத்தப்போகிறார்கள். அந்த மண்ணின் பெரும்பகுதியை ஆழக்கடலில் கொடடப் போகிறார்கள். இது கடலடி உயிரினங்களைப் பாதிக்கும். இங்கே உள்ள கடலடி உயிரினங்கள், குறிப்பாக நுண்ணுயிர்கள் தான் கடல் உயிரினங்களின் அடிப்படையாகும். இந்த உயிரினங்கள் அழிய நேர்ந்தால், அது ஒட்டுமொத்த கடலுயிர்களின் உயிரச் சுழற்சியிலும் சரிவைக் கொண்டுவரும்.

கடலோர நிலத்தில் கொட்டப்படும் மண்ணும், நீரில் கொட்டப்படும் மண்ணும் நாம் சொன்னதைக் கேட்டு அங்கேயே இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. கடல் நீரோட்டத்தின், காரணமாகவும், அரிப்பின் காரணமாகவும் அவை இடம்பெயரும். அப்படியானால் அவை எங்கே செல்லும்? அவை கால்வாயை மறுபடியும் மூடாதா? அல்லது அரிப்புக்குக் காரணம் ஆகாதா? கொட்டப்படும் மண் என்ன விளைவை ஏற்படுத்தும் என்பதற்கான ஆய்வுகள் செய்யப்பட்டதா? நேரி அறிக்கையில் இந்த விபரங்கள் இல்லை.

4. இந்துமகா சமுத்திரத்திற்கும், வங்காள விரிகுடாவுக்கும் இடையில் தோண்டப்படும் இந்தக் கால்வாய் வழியாக உயிரினங்கள் இடம் பெயரும் என்பதைத் தெளிவான வார்த்தைகளில் ஒப்புக்கொள்கிறது. அந்தப் பகுதி நீருக்குச் சொந்தமில்லாத உயிரினங்கள் உள்ளே வரவும், சொந்தமான இனங்கள் வெளியேறவும் செய்யும். ஆனால், எவ்விதமான உயிரினங்கள் உள்ளே வரும், எவை வெளியேறும் என்பதை யாரும் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. ஒரு சூழல் மண்டலத்தில் அந்நிய இனங்கள் நுழையும்போது, என்னவகையான மாறுதல்வரும் என்பதை நாம் அறிவோம். அதனால்தான், தொன்மை வனங்கள் சிலவற்றை அவ்வாறே இருக்கும்படி காப்பதற்கான சட்டங்களை இயற்றியுள்ளோம். புவிப்பரப்பில் எங்கெல்லாம் அந்நிய தாவரங்கள் வந்தனவோ, அங்கெல்லாம் உள்நாட்டு இனங்கள் பல அழிந்ததை நாம் அறிவோம். கடலுக்குள்ள உயிர்ச்சூழலில் நாம் செய்யும் மிகப்பெரும் மாற்றமென்றே சேது சமுத்திரத் திட்டத்தை நாம் சொல்ல வேணடும். அதன் விளைவு என்னவாக இருக்கும என்பதை யாரும் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. ஆனால், தற்போதுள்ள கடலுயிர்ச் சூழல் மிகப்பெரும் மாற்றத்திற்கு ஆட்படும் என்பதை மட்டும் உறுதிபடச் சொல்ல முடியும்.

5. மீனவர்கள் மீது இந்தத்திட்டம் என்ன பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். மன்னார் வளைகுடா மற்றும் பாக்ஜலசந்தி கடற்பகுதியில் 138 கிராமங்களும், நகரங்களும் 5 மாவட்டங்களில் விரிந்து கிடக்கின்றன. மன்னார் வளைகுடா மீனவர்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் கீழ் நிலையில் உள்ளது என்று நேரி ஒப்புக்கொள்கிறது. மேலும், மீனவக் குடும்பங்களில் 40% கடனில் வாழ்கின்றனர் என்றும் குறிப்பிடுகிறது. இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், 1992 ஆம் ஆண்டில் - 55325 தொன்னாக இருந்த கடலுணவு உற்பத்தி 2001ஆம் ஆண்டில் - 205700 தொன்னாக உயர்நதுள்ள நிலைமையில்தான் மீனவர்களின் இந்த ஏழ்மை நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இந்த பாவப்பட்ட மக்களுக்கு சேதுசமுத்திரம் என்ன விளைவுகளைக் கொண்டுவரும்? சேதுசமுத்திரம் கட்டப்படும்போது உள்ள பணிகளின் காரணமாக பாரம்பரிய மீன்பிடிப்புத் தொழில் பாதிக்கப்படும் என்றும், அவர்களின் வருமானம் மேலும் சரியும் என்றும் நேரி அறிக்கை தெளிவாகச் சொல்கிறது. மேலும் கட்டுமானப்பணிகள் நடக்கும்போது அதன் காரணமாக மீனவமக்கள் கடற்கரையோரத்தைப் பயனபடுத்துவதிலும், பிரச்சனை வரும் என்றும் நேரி அறிக்கை ஒப்புக்கொள்கிறது. தனுஷ்கோடி மீனவர்கள் நிரந்தரமாக இடம்பெயர வேண்டும் என்றும் சொல்கிறது. மேலும் கால்வாய் தோண்டப்பட்ட பின்னர், மீனவர்கள் கால்வாயைக் கடக்க நேரம் ஒதுக்கப்படும் என்று நேரி சொல்கிறது. அதாவது - மீனவர்கள் கப்பல்கள் நடமாட்டத்தை ஒட்டி கடலுக்குள் அனுமதிக்கப்படுவார்கள். வானிலை, நீரோட்டம், பருவநிலை போன்ற பல்வேறு காரணிகளை ஒட்டி, மாறும் மீன் பிடிநேரம் கப்பல்கள் நடமாட்டத்தால் மேலும் சுருக்கப்படும் என்பது தெளிவு.

ஆக, திட்டம் தொடங்கிய உடன் மீனவ மக்களின் வறுமை அதிகமாகும். திட்டம் அமுலபடுத்தப்பட்டவுடன், கடல் உயிர் இனங்களின் இடப்பெயர்ச்சி காரணமாக மீனவ மக்களின் வருமானம் தொடர்ந்து அடிவாங்கும். மீனவ மக்களை இடப்பெயர்ச்சி செய்வது அத்தனை எளிதான விடயமல்ல என்பதையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். ஏனென்றால், கடற்கரை வளம்பற்றிய பாரம்பரிய உரிமைகளையும் நாம் மாற்றவேண்டிவரும். அது புதிய மோதல்களைக் கொண்டு வரும்.

சேதுசமுத்திரத்தின் சமூக இழப்பு எவ்வளவு என்பதை நேரி கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. மனிதர்களின் துன்பங்களையும், இழப்புக்களையும் எந்த அளவைக்கொண்டு கணக்கிடுவது?

6. சூழற்பாதிப்பு பற்றி நேரி சொல்லும் விடயங்கள் மிகத் தெளிவற்ற வார்த்தைகளால் சொல்லப்படுகின்றன. 'குறிப்பிடத்தக்கவை அல்ல, தூரத்தில் இருக்கிறது, அற்பமானது' என்ற வார்த்தைகளில் சூழற்பாதிப்புக்களை ஒதுக்கிவிட முயல்கிறது. ஒருவேளை அது திட்டத்தை அமுல்படுத்துவதற்கான விருப்பத்திலிருந்து தொடங்கலாம். ஆனால், விஞ்ஞானபூர்வ ஆய்வில் விடயங்கள் கறுப்பு வெள்ளையாக தெள்ளத் தெளிவாக முன்வைக்கப்பட வேண்டும்.

மன்னார் வளைகுடாவை கடல் வாழ் உயிர் இனங்களின் சரணாலயமாக இந்திய அரசு அறிவித்துள்ளது. அதற்காக ஐக்கியநாடுகளிடமிருந்து நிதியும் பெற்றுள்ளது. இப்பகுதியைப் பாதுகாப்பதற்காக 140 கோடிரூபாத் திட்டம் உள்ளது.

மன்னார் வளைகுடா கடல்வாழ் உயிரினங்கள வளமாக நிறைந்துள்ள கடல் இது. உலக முக்கியத்துவம் வாய்ந்தது. பிடிபடும் மீன் வகைகள 441. அவற்றில் அழகுக்கானவை மட்டும் 100. மன்னார் வளைகுடாவில் பிடிக்கப்படும் மீன் தமிழ் நாட்டின் மொத்த உற்பத்தியில் 20% ஆகும்.

இந்தநிலையில் 10,500 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுள்ள, பாதுகாக்கப்பட்ட கடற்பகுதிக்கு 20 கிலோமீற்றர் தொலைவுக்குள் கட்டுமானப் பணிகளைச் செய்வது. அரிதான கடல் உயிரினங்களையும், கிடைத்துக்கொணடிருக்கும் மீன் செல்வத்தையும் அழிப்பதற்கே இட்டுச்செல்லும். ஆனால், வான்தீவுக்கும், கால்வாய்க்கும் இடைப்பட்ட தூரம் 6 கிலோமீற்றர் மட்டுமே. கால்வாயின் மற்றொரு புறத்தில் இருக் கும் சிங்ளே தீவுக்கும் - கால்வாய்க்கும் இடைப்பட்ட தூரம் ஏறக்குறைய 20 கிலோ மீற்றர். கால்வாயை அமைக்க வேண்டிய முடிவிலிருந்து துவங்கி, வான்தீவுக்கு ஆபத்து இல்லை என்று சமாளிப்புச் செய்யும் வேலையை நேரி அறிக்கை செய்கிறது.

7. எல்லாம் முடிந்து, கால்வாய் கட்டப்பட்டு விட்டால் என்ன ஆகும்?

✡ கடல் உயிர்வாழ் மண்டலம் நாம் கண்டுணர முடியாத மாறுதல்களுக்கு ஆளாகும்.

✡ மீனவர்கள் கடும் பாதிப்புக்கு ஆளாவர அவர்களுக்கு வருமான இழப்பு ஏற்படும்.

(இந்த இரண்டு விடயங்களையும் நேரி ஒரு மாதிரியாக ஒப்புக்கொள்கிறது.)

✡ கடல்வாழ் உயிரினப் பாதுகாப்பு மண்டலம் மெல்ல மெல்ல சிதைய ஆரம்பிக்கும்.

✡ கடல் நீரோட்டத்தின் காரணமாக மணல் படிவு தொடர்கதையாகும். அதன் காரணமாக மண் அள்ளுவது தொடர்கதையாகும். அதற்கான நிதிச் செலவு என்ன என்பதை யாரும் சொல்லவில்லை. *(தொடரும்)*

நன்றி திண்ணை

# தலிபான் தளபதிகளில் ஒருவர் ஆப்கானில் சுட்டுக் கொலை!

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலைமறைவாக செயற்படும் தலிபான் தீவிரவாத இயக்கத்தின் மூத்த தளபதிகளில் ஒருவர் கபார். இவர் உருஸ்கான் மாநிலத்தில் உள்ள கிராமத்தில் 2 ஆதரவாளர்களுடன் நடந்து சென்றபோது சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஆப்கானிஸ்தானில் தீவிரவாத எதிர்ப்பு யுத்தத்தை அமெரிக்கா தொடங்கியபோது கைதான இவர், கியூபாவில் உள்ள அமெரிக்க இராணுவச் சிறைக்கு அனுப்பப்பட்டார். அங்கிருந்து விடுதலையான இவர் ஆப்கானிஸ்தானில் வசித்து வருகையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.




# பாகிஸ்தான் இராணுவத் தளபதியாக 2007 வரை முஷாரப் நீடிப்பு!



பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப், தான் 2007 ஆம் ஆண்டுவரை இராணுவத் தளபதியாக நீடிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இஸ்லாமாபத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளதாவது -

தீவிரவாதத்தை ஒழிக்க இராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது. நமக்கு வீரமும், விவேகமும் தேவை. இராணுவத் தளபதியாக இல்லாமல், தீவிரவாதத்தை தடுக்க நடவடிக்கை எடுக்க முடியுமா? முடியாது.

எனவேதான் நான் 2007 ஆம் ஆண்டுவரை இராணுவத் தளபதியாகவும், பாகிஸ்தான் அதிபராகவும் நீடிக்க முடிவு செய்துள்ளேன். அது தான் நல்லது. 2007 ஆம் ஆண்டு நேர்மையான தேர்தல் நடைபெறும். அதன் பிறகு நான் பதவியில் இருந்து விலகுவேன் - இவ்வாறு முஷாரப் கூறினார்.

# ஈராக்கின் பலூஜா நகரில் தொடரும் அமெரிக்க விமானப் படையின் தாக்குதல்

ஈராக்கின் பலூஜா நகர்மீது அமெரிக்கப் போர்விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 6 பேர் காயமடைந்தனர்.

இறந்தவர்களுள் சிறுவனொருவனும் அடங்குவதாக பலூஜா நகர



வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மைக்காலமாக ஈராக்கில் இடம்பெற்றுவரும் கடத்தற் சம்பவங்களுடன் தொடர்புடைய அபு முசாப் அல்சர்காவி தலைமையிலான கிளர்ச்சிவாதிகளின் நிலைகள் மீதே தக்குதல் மேற்கொண்டதாகவும் பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லை எனவும் அமெரிக்கப்படையினர் தெரிவித்தனர்.

இதே சமயம் பாக்தாத்தில் சதார் ஆதரவுப்படைகளின் நிலைகள் மீது அமெரிக்க தாங்கிகள் மேற்கொண்டதாக்குதலில் 5 பொதுமக்கள் கொல்லப்படனர். ஆனால் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் சதார் ஆதரவுப்படைகள் என அமெரிக்கப் படைகள் தெரிவித்தன.

அண்மைய காலங்களில் பலூஜா நகர்மீது தாம் மேற்கொண்ட பாரிய விமானத்தாக்குதல்களால் 100 இற்கும் மேற்பட்ட அபுமுசாப் அல்சர் காவி தலைமையிலான தீவரவாதிகள் கொல்லப்பட்டதாக அமெரிக்கப்படையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஈராக்கின் பஸ்ரா நகரில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் கிளர்ச்சிவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு பிரித்தானியப் படையினர் கொல்லப்பட்டனர்.

இதேசமயம் கடந்தவாரம் பாக்தாத் நகரில் வைத்து ஈராக்கிய தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட எகிப்திய தொலைத்தொடர்புச் சேவை நிறுவனம் ஒன்றின் ஊழியர்கள் இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது.



ஸ்பெயின் நாட்டில் பிரபலமான காளைகளை அடக்கும் போட்டி இந்த ஆண்டு தொடங்கிவிட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடக்கும் இந்தப் போட்டிகளில் ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டு காளைகளை அடக்குவர். சிவிலி நகரில் நடந்த காளைச் சண்டையில் சீறிவரும் ஒரு காளையை வீரர் ஒருவர் அடக்க முயலும் காட்சி.

# சி.என்.என். தொலைக்காட்சி நிருபர் காஸாவில் வைத்து கடத்தப்பட்டார்

காஸாப்பகுதியில் வைத்து நேற்று முன்தினம் சி.என்.என் தொலைக்காட்சி நிருபர் ஒருவர் இனந்தெரியாத ஆயுத பாணிகளால் கடத்தப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்டவர் இஸ்ரேலிய அராபியரான றியாட் அலி எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும் இவரது கடத்தலுக்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லையென பலஸ்தீனத்தின் சகல ஆயுதக்குழுக்களும் அறிவித்துள்ளன.

காஸாவின் நகரப்பகுதியில் செல்லும் சகல வாகனங்களையும் பொலிஸார் வழிமறித்து சந்தேகத்துக்கிடமான வகையிலுள்ளவர்களை சோதனையிடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் காஸாப் பகுதியிலுள்ள சி.என்.என். தொலைக்காட்சி நிறுவனத்தின் அலுவலகத்திற்கு ஆயுத பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

றியட் அலி கடத்தப்பட்டது தொடர்பாக மற்றொரு சி.என்.என் நிறுவன ஊழியரான பென் வெட்மன் தெரிவித்ததாவது -

நாங்கள் ஒரு குழுவாக காரொன்



றில் காஸாவின் பிரதான வீதி வழியாகச் சென்றுகொண்டிருந்தோம் அவ்வேளை எமது காருக்கு முன்னால் வேறொருகார் வந்துநின்றது. அந்தக் காரிலிருந்து வெள்ளை நிற உடையணிந்த இளைஞர் ஒருவர் பிஸ்டலுடன் இறங்கினார்.

பின்னர் அவர் எமது காரை நோக்கிவந்து உங்களில் யார் றியட் அலி எனக்கேட்டார். இதன் பின்னர் அவர் றியட் அலியைக் கடத்திச் சென்றார். கடத்தல்காரர்களில் பலர் ஏ.கே47 துப்பாக்கிகளுடன் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். இந்தக் கடத்தலை பலஸ்த்னப் பிரதமர் அகமட் கூரே வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் இது பலஸ்தீன மக்களின் விருப்பிற்கு எதிரானதெனவும் தெரிவித்தார்.

# பூலான் தேவியின் கணவர் இடைத் தேர்தலில் போட்டி!

(லக்னோ)

உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களை கலக்கிய கொள்ளைக்காரியாக இருந்த பூலான்தேவி, தலைமறைவு வாழ்க்கையை கைவிட்டு சரண் அடைந்ததால் அவருக்கு மாநில அரசு பொது மன்னிப்பு வழங்கியது.

பின்னர் அவர் உத்தரப் பிரதேச மாநில அரசியலில் குதித்தார். சமாஜ்வாதி கட்சி சார்பில் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு எம்.பி.ஆகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உம்மத்சிங்கை திருமணம் செய்து அமைதியான குடும்ப வாழ்க்கை நடத்திவந்த பூலான் தேவி சில வருடங்களுக்கு முன் டெல்கியில் அவரது வீட்டில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த நிலையில் உத்தர பிரதேச மாநிலம் அக்பர்பூர் எம்.பி. தொகுதி இடைத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக பூலான்தேவியின் கணவர் உம்மத்சிங் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்த தகவலை மாநில காங்கிரஸ் தலைவர் ஜகதாம் பிகாபால் அறிவித்தார். அவரை வேட்பாளராக நிறுத்த காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி சம்மதித்துள்ளதாகவும் கூறினார்.



உம்மத்சிங் நாடாளுமன்ற தேர்தலில் பாஸ்தி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். இப்போது அக்பர்பூர் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

# பிரான்ஸ் பிரஜை ஒருவர் சவுதியில் சுட்டுக் கொலை!

(ஜெட்டா)

சவுதி அரேபியாவில் வசித்து வரும் பிரான்ஸ் பிரஜை ஒருவர் ஜெட்டா நகரில் சுட்டுக்கொல்லப்பட்டார். லோரண்ட் பார்போட் 41 வயதான அவர் கடந்த சனிக்கிழமை 1 மணிக்கு இரவு சந்தைக்கு முன்பு நிறுத்தப்பட்டிருந்த காரில் ஏறியபோது, சுட்டுக்கொல்லப்பட்டார்.

என்ன காரணத்துக்காக அவர் கொல்லப்பட்டார் என்பது தெரியவில்லை. அல்கொய்டா தீவிரவாதிகள தான் இந்த தாக்குதலை நடத்தி இருக்க வேண்டும் என்று சவுதி பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொலைச் சந்தேக நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

# டுபாய் விமான நிலையத்தில் சுவர் இடிந்து வீழ்ந்து ஊழியர்கள் எண்மர் பலி

டுபாய் சர்வதேச விமான நிலையத்திலுள்ள ஒரு கட்டடத்தின் சுவர் இடிந்து விழுந்ததில் அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த 8 ஊழியர்கள் உயிருடன் இடிபாடுகளில் சிக்கி பலியானதாக கூறப்படுகிறது.

அந்த விமான நிலையத்தை பல கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தி ராட்சத விமான இறக்கை வடிவத்தில் புதிய விமான நிலையம் கட்டப்பட்டது. ஒரு கிலோ மீற்றர் நீளத்துக்கு இந்த கட்டடம் வடிவமைக்கப்பட்டிருந்தது. பிரான்ஸ் நாட்டு நிறுவனம் இதை வடிவமைத்து, கட்டிக்கொடுத்தது. இந்த கட்டடம் தான் இடிந்து விழுந்தது.




# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் யாழ்.பிரதான வீதி, நெல்லியடிக் கிளைகளில் 30.6.2003 இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் 02.10.2004 திகதியில் யா.ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | பின்வரும் திகதிகளுக்கு முன்பு அடகுவைத்த நகைகள் | ஏலம் விடப்படும் திகதி | இடம். |
|---|---|---|---|---|
| 01 | யாழ்.பிரதான வீதி - 104 | 30.06.2003 | 02.10.2004 | மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி |
| 02 | நெல்லியடி - 106 | 30.06.2003 | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**மக்கள் வங்கி,**

பிராந்திய முகாமையாளர்,
யாழ்ப்பாணம்/வன்னி.

பிரதேச காரியாலம் (வட வலயம்)
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகளுடன் சந்திப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தாக்கப்பட்டமை தொடர்பாக நேற்று யாழ்.பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரிக்கும், மனிதஉரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் ருவான்சந்திரசேகரா, விசாரணை அதிகாரி பாருஸ் மற்றும் சட்டத்தரணி சாந்தாஅபிமன்னசிங்கம் ஆகியோர் யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு சென்று உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் தயா செனவிரட்ண விடம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சம்பவம் குறித்து முறைப்பாடு செய்தனர்.

அந்த முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட அவர் மனிதஉரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளைத் தாக்கிய பொலிஸார்மீது உரிய நடவடிக்கைஎடுக்கப்போவதாகத் தெரிவித்தார்.

அத்துடன், இது தொடர்பான விசாரணைகளை பெலிஸ் உயர் பீடமும் நடத்தத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார். நான்குமணி நேரம் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதேவேளை - இது தொடர்பான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர்பீடமும் நடத்தவுள்ளதுடன் - இது தொடர்பான முறைப்பாடுகள் அரசியல் தலைவர்கள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை- கடந்த ஞாயிற்றுகிழமை சிவில் உடையில் வெள்ளை வானில் சென்று கல்வி யங்காட்டுப் பகுதியில் வைத்து யாழ். பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சந்திரகுமார்(வயது-23) எனும் குடும்பஸ்தர் நேற்று முன்தினம் 2.15 மணியளவில் யாழ். சிறைச்சாலையில் ஒப்படைக்கப்பட்டார்.

அவரைப் பார்வையிடுவதற்கு மனிதஉரிமை ஆணைக் குழுவினருக்கு அனுமதியளிக்கப்பட்ட போதிலும் உறவினர்களையோ பத்திரிகையாளர்களையோ அனுமதிக்கவில்லை.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரிகள் சிறையில்அடைக்கப்பட்டவரை பார்வையிட்டபோது அவரது காலில் பலத்த காயம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டபோதிலும் அது பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலயத்திற்கு அழைத்துச் செல்கையில் அவர் தப்பிச்செல்ல முயன்றபோது ஏற்பட்ட காயம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து யாழ்.மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரனிடம் கேட்டபோது, இக்கைதி தொடர்பாக 20இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் இருப்பதால் அவரைத் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவித்தார். (ப)

## இராட்சத ஊதுபத்தி கண்டியில் கொளுத்தப்பட்டது

கண்டி முறுத்தலாவ பகுதி மக்கள் உற்பத்தி செய்த இராட்சத ஊதுபத்தி நேற்றுக் கொளுத்தப்பட்டது.

கடந்த ஒரு மாதகாலமாக இந்தப் பிரதேச மக்கள் இணைந்து இந்த ஊதுபத்தியை உற்பத்தி செய்தனர்.

இதன் உயரம் 110 அடி எனவும், நிறை ஒன்றரைத் தொன் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது உலக சாதனையாக இருக்கலாம் எனப் பிரதேச மக்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

நேற்றுக்கொழுத்தப்பட்ட இந்த ஊதுபத்தி இன்னும் இரண்டு மாதங்களுக்கு தொடர்ந்து புகையை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (01)

## அண்மைய..

கள் அவர்களின் உள்முரண்பாடுகளினாலும், தனிப்பட்ட காரணங்களாலும், அவர்களினால் மேற்கொள்ளப்படும் தனிநபர் கொலைகள்தான் எனத் தெரியவந்துள்ளது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## புலிகளின்...

கொலைகள் அவர்களுக்குள்ளேயே நடக்கின்றன. இது தொடர்பாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.இந்த நடவடிக்கைகள் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது அப கீர்த்தியை ஏற்படுத்தும் முகமாக திட்டமிட்டு பரப்புரை செய்யப்படுகிறது.

இது தொடர்பாக கண்காணிப்புக் குழு தலைவரிடம் கலந்துரையாடி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சோதனைச்சாவடிகளில் உஷாராக இருங்கள்!

**மட்டு பொலிஸ் மா அதிபர் உத்தரவு**

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சோதனைச் சாவடிகளில் காவலில் ஈடுபட்டிருக்கும் பொலிஸாரை உசார் நிலையில் இருக்குமாறு கிழக்குப் பிராந்தியப் பிரதி பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பொலிஸ் அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்ட சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்ததாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பில் தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் -

சோதனைச் சாவடிகளில் பொலிஸார் கடமைகளில் ஈடுபடும்போது எப்போதும் உஷார் நிலையில் இருக்கவேண்டும் பொலிஸார் தாம் கடமைகளில் ஈடுபடும்போது மக்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் நடந்துகொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பை முன்னிட்டு மட்டக்களப்பு நகரப் பகுதியிலுள்ள வீதிகள் தோறும் பொலிஸார் என்றுமில்லாத வகையில் வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பனிச்சங்கேணி....

எறிகணைகள் வீடுகளில் விழுந்து வெடித்ததில் இரண்டு பெண்கள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் ஒருவர் பின்னர் மருத்துவமனையில் உயிரிழுந்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து புலிகள் பதுங்கித் தாக்குதல் நடத்தி -தாக்குதல் நடத்தியவர்களை விரட்டியடித்தனர்.

தற்போது அப்பகுதிகளில் தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் முன்னணி காவலரண்ண இலக்குவைத்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கும்கருணா குழுவினால் இந்த மோட்டார் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர் பனிச்சங்கேணியைச் சேர்ந்த எஸ்.காளிப்பிள்ளை (வயது-40) எனவும், இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர் கே.உதயச்செல்வி (வயது-37) எனவும் மட்டக்களப்பு வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

காளிப்பிள்ளை என்ற பெண் தலையில் பலத்த காயங்களுடன் ஆபத்தான நிலையில் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு உயிரிழந்ததாகத் தெரியவருகிறது.

## இடைக்கால நிர்வாகத்தை ஆதரித்து பி.பி.சியின் சிங்கள சேவையின் பெருமளவு வாசகர் வாக்களிப்பு

பி.பி.சியின் சிங்கள சேவை நடத்தும் இணையத் தளம் மூலமான கருத்துக் கணிப்பில் - கலந்துகொண்டோரில் 58.2 வீதமானோர் இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் எனக கருத்துக் கூறியுள்ளனர்.

பி.பி.சி சிங்கள சேவை கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் - இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க வாசகர்கள் விரும்புகிறார்களா என்பதைக் கண்டறிய கருத்துக் கணிப்பு ஒன்றை ஆரம்பித்தது.

இந்தக் கருத்துக்கணிப்பின் அடிப்படையிலேயே - நேற்று இரவு 11 மணி நிலவரப்படி 58.2 வீதமானோர் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்த வாக்கெடுப்பில் இலட்சக் கணக்கான இணையத்தள வாசகர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றித் தமது கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

நேற்று இரவு 11 மணி நிலவரப்படி இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு 10 லட்சத்து 33 ஆயிரத்து 452 பேர் ஆதரவாகவும்- 7 லட்சத்து 42 ஆயிரத்து 659 (41.8 வீதம்) பேர் எதிராகவும் வாக்களித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சமாதானம் குறித்த...

யில்லை. இது சம்பந்தமாக கருத்துக்கள் ஏதும் முன்வைக்கப்படாத நிலையில், மாற்றம் செய்யவேண்டிய தேவையில்லை. இது தமிழ் மக்களின் தரப்பில் உறுதியான ஆவணமாக உறுதிசெய்யப்பட்டு எமது ஆணையைப்பெற்ற ஒன்றாகக்காணப்படுகிறது.

தறபோது ஜனாதிபதியும் அவரது அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களும் சர்வதேச அளவில் ஒரு தவறான செய்தியைப் பரப்பிவருகிறார்கள்.

அதாவது, விடுதலைப் புலிகள் தான் பேச்சுவார்த்தைக்குத் தடையாக இருக்கிறார்கள். பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு புலிகள்தான் தாமதம் காட்டுகிறார்கள் என்ற தவறான நிலைப்பாட்டை முன்வைக்கிறார்கள். இது தவறானது.

தற்போதைய அரசாங்கம் பதவியேற்ற காலம் முதல் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டுமென வலியுறுத்தி வருகிறோம். இதுதான் உண்மையானது. ஜனாதிபதியோ, அவரைச் சார்ந்தவர்களோ சமாதானம் தொடர்பாக சர்வதேசத்தில் வெளிப்படுத்தும் கருத்து உண்மைக்குப் புறம்பானது.

மிக விரைவில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு இடைக்கால வரைபுக்கு அமைய தீர்வு ஒன்று எட்டப்பட்டு இயல்புநிலை தோற்றுவிக்கப்பட வேண்டும்.

சமாதான முன்னெடுப்புக்களின் அடிப்படையில் மனிதாபிமான நடவடிக்கை மிகவும் விரைவாக முன்னெடுக்கப்பட வேண்டும். ஆகவே அந்த வகையில் பேச்சுக்கள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டுமென விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் இறுக்கமான உறுதிப்பாட்டுடன் இருக்கிறது.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து தமக்குள் முரண்பாடுகளைக் கொண்டிருக்கும் அரசாங்கம், அதனால் பேச்சு மேசைக்கு வரத் தயங்குவதை வெளிகாட்டாமல், சர்வதேச ரீதியில் உண்மைக்குப் புறம்பான பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறது. இதற்கமைய எமது மக்களினதும் தலைமைப்பீடத்தினதும் நிலைப்பாடுகளை வெளிநாடுகளுக்கு உயர்மட்ட அளவில் வெளிப்படுத்தவிருக்கிறோம்.

வெளிநாடுகளின் மூலம் பெற்ற உதவிகளைக் கொண்டுதான் கடந்த காலங்களில் தமிழ்மக்கள் மீதான யுத்தத்தை - மனிதஉரிமை மீறல்களை அரசாங்கம் கட்டவிழ்த்துவிடடது.

ஆகவே, பேச்சுவார்த்தை மேசை மூலம் சரியான தீர்வு தமிழ்மக்களுக்கு கிடைக்காத நிலையில் வெளிநாடுகள் வழங்கும் நிதியுதவி மீண்டும் தமிழ்மக்களை அடக்குமுறைக்குள்ளாக்க பயன்படுத்தக் கூடாது என்பதுதான் எமது மக்களின் நிலைப்பாடு. எமது மக்களின் நிலைப்பாட்டில்தான் சர்வதேசம் இருக்கிறது என்பதை அனைவரும் அறிவீர்கள்.

அண்மையில் ரோக்கியோவில் இடம்பெற்ற சர்வதேச ரீதியில் நிதி வழங்கும் மாநாட்டில் உதவிவழங்கும் நாடுகள் தகுந்த தீர்மானம் ஒன்றை எடுத்திருந்தார்கள்.

பேச்சுக்களின் மூலமான தீர்வின் அடிப்படையில்தான் வெளிநாட்டு உதவிகள் வழங்கப்படும் என்பதே அந்தத் தீர்மானமாகும்.

இதனை தமிழ்மக்களும் தலைமைப்பீடமும் வரவேற்றிருக்கிறது. இந்த நிலைப்பாட்டில் சர்வதேச சமூகம் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளபோதுதான் இலங்கை அரசை ஒரு வழிக்குக் கொண்டுவந்து சமாதான சூழல் ஒன்றைக் கட்டியெழுப்ப முடியும்.

மேலும், எமது போராளிகள் பலா கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்கின்றபோது, யுத்தநிறுத்த மீறல் சம்பவங்களாக எமது பிரதேசத்தில் ஆயுதங்களுடன் கைதுசெய்தவர்களையும் விடுதலை செய்வோம். அதற்கான முடிவொன்றை அரசாங்கம் எடுக்குமானால் இந்தப் பிணக்கு சுலபமாகத் தீர்க்கப்படும்.

எமது ஐரோப்பிய விஜயத்தின் நோக்கம் தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை சர்வதேசத்துக்குத் தெளிவுபடுத்துவதேயாகும். அத்துடன் சர்வதேச அரசியலாளர்களைச் சந்தித்து எதிர்காலத்தில் நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை சம்பந்தமாக சில முடிவுகள் எடுப்பதற்குமாகும்.

ஜனாதிபதி சந்திரிகா ஒவ்வொரு நேரத்திற்கும் ஒவ்வொரு மாதிரி பேசுகிறார். எனவே சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுத்து அவர்களைப் பேச்சு மேசைக்குக் கொண்டுவர வேண்டும்.

இடைக்கால வரைபை ஏற்றுக்கொண்டு அரசு பேச்சு நடத்தினால், தாம் முழு ஆதரவு வழங்குவோம் என எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன. இந்தத் தருணத்தை அரசு சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

வடக்கு - கிழக்கில் அநாமதேய கொலைகள் நடைபெறுவது தொடர்பாக எமது மாவட்டப் பொறுப்பாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளோம். இதனை எமது தலைவரும் வலியுறுத்தியிருக்கிறார்.

இந்த விடயம் தொடர்பாக போர் நிறுதத்க் கண்காணிப்புக்குழுத் தலைவருடனும் கலந்துரையாடவுள்ளோம்.

இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கொலைகள் இடம்பெறுவதைத் தடுக்க சட்டம் ஒழுங்கைக் கடைப்பிடிக்கும் பொலிஸ், நீதிச் சேவைகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நாம் நான்கு ஐந்து நாடுகளுக்குச் செல்லவிருக்கிறோம். ஜெனிவா மாநாட்டின் பின்னர்தான் அந்த நாடுகள் எவையெனத் தெரியும். நாம் வடக்கு - கிழக்கில் மனிதஉரிமை ஆணைக்குழு ஒன்றை அமைத்துள்ளோம்.

இந்த மனிதஉரிமை ஆணைக் குழுவை மேம்படுத்த சர்வதேச ரீதியில் ஆதரவைப் பெறுவது இந்த மாநாட்டின் ஒரு நோக்கமாகும் என தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

## புலிகளின்....

புறப்பட்டுச்சென்றனர்.

இந்தக் குழுவில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கீதா, சமாதான செயலகத்தைச் சேர்ந்த செல்வி ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இவர்களை வழியனுப்பிவைப்பதற்காக விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்கள், தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் ஆகியோர் கிளிநொச்சி பொது மைதானத்துக்கு வந்திருந்தனர்.

நேற்றுப் பிற்பகல் கொழும்பைச் சென்றடைந்த புலிகளின் குழுவினர், இன்று காலை கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக ஜெனிவாவுக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளனர்.

இவர்கள் மூன்று வாரகாலம் ஐரோப்பிய நாடுகளில் தங்கியிருந்து இடைக்கால தன்னாட்சி அதிகார வரைவு குறித்து சில சட்டநிபுணர்களுடன் ஆராயவிருப்பதாகத் தெரியவருகிறது.

ஒக்ரோபர் முதலாம் திகதியிலிருந்து ஒரு வாரகாலம் ஜெனிவாவில் தங்கியிருக்கும் இக்குழுவினர், சுவிஸ் வெளிவிவகார அமைச்சு மற்றும் யு.என்.எச்.சி.ஆர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்துவர்.

அத்துடன் ஐ.நா. மனிதஉரிமை ஆணைக்குழு, சர்வதேச செஞ்சிலுவைக் குழு அதிகாரிகளுடனும் பேச்சு நடத்துவர்.

இதன்பின்னர் ஒஸ்லோவுக்குப் புறப்பட்டுச் செல்லும் புலிகளின் அரசியல் குழுவினர், எதிர்வரும் 7 ஆம் திகதி நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரையும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

தொடர்ந்து அயர்லாந்து, டென்மார்க், சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளுக்கும் இக்குழுவினர் விஜயம் செய்யவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### வாரித்தம்பி கணேசலிங்கம் (குணம்)

அல்லிப்பளை - பளையைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வசிப்பிட மாகவும் கொண்ட வாரித்தம்பி கணேசலிங்கம் (குணம்) நேற்றுமுன்தினம (27.09.2004) திங்களன்று காலமாகவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வாரித்தம்பி - செல்லமா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற மாணிக்கம் - லட்சுமி தம்பதியினரின் மருமகனும் ஈஸ்வர நாயகியின் (ஈஸ்வரி) அன்புக் கணவரும், திரோசன், டிஷாந்தன், சஜீவன் ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அல்லிப்பளை - பளையில் இன்று (29.09.2004) புதன்கிழமை இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.